கொலம்பியா புதிய வெளியீடு



சங்கீத வித்வான்

துறையூர் ராஜகோபால சர்மா


GE.6262 { மறவாவரம் (மோஹனம்) உ.பாகங்கள் சாகித்யம் "ரசி"



சங்கீத வித்வான்

B.S.ராஜா அய்யங்கார்

GE.6256 { ஸ்ரீசாமுண்டேச்வரி / நன்னுப்ரோசுட



கொத்தமங்கலம் சீனு

GE.6172

ஈசனே ....

வேலவனே

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதறாஸ்.



கல்கி
பொருளடக்கம்

மலர் 5 இதழ் 23

1946 ஜனவரி 13

பார்த்திப ஞு மார்கழி 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

பொங்கல் பண்டிகை தமிழர்களுக்கு வருஷத்தில் ஒரு நாள்; அன்று தமிழ் நாட்டில் பல இடங்களில் தமிழ்த் திருநாள் கொண்டாடப்படுகிறது.

தமிழ் மக்களின் பண்பாடானது, நெடுங் காலமாக — குறைந்தபட்சம் மூவாயிரம் வருஷ காலமாக — வழிவழியாக வளர்ந்து நமக்குக் கிடைத்திருக்கும் பிதிரார்ஜித சொத்து. தமிழரது பண்பாட்டின் சிறப்புகளை உள்ளபடி அறிய வேண்டுமானால், தமிழ் நாட்டின் புராதனமான சிற்பக் கலை, சித்திரக் கலை, நடனக் கலை, இசைக் கலை ஆகியவற்றைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்குச் சுமார் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே மேற்கூறிய கலைகள் எல்லாம் தமிழ் நாட்டில் மிகோன்னத நிலையை அடைந்திருந்தன என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் இருக்கின்றன. எனவே அதற்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழகத்தில் மேற்படி கலைகள் தோன்றிச் சிறந்த முறையில் வளர்ந்து வந்திருக்க வேண்டும் என்று திட்டமாய்க் கூறலாம்.




தமிழரின் கலைகள் எல்லாம் தெய்வ தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு தேவாலயங்களோடு இணைந்தே வளர்ச்சி பெற்று வந்தன. அந்தக் கலைப் பண்பாட்டின் மகோந்நத சிகரம் நடராஜ விக்கிரகமாகும். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் இறைவனது முத்தொழில்களையும் ஸ்ரீ நடராஜப் பெருமானது நடனத் தோற்றத்திலே நாது முன்னோர்கள் அமைத்தார்கள். நடராஜ விக்கிரகத்தைப் போன்ற சிற்ப அற்புதம் உலகத்திலே வேறெங்கும் கிடையாதென்று மேனாட்டு மிகச் சிறந்த அறிஞர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

"செந்தமிழ் பேசப் பிறந்தோம் நாம்—கலைச்
செல்வங்களுக்கே உரியோம் நாம்"

என்ற பெருமித உணர்ச்சியுடன் தமிழ் மக்கள் பொங்கல் பண்டிகையன்று தமிழ்த் திருநாள் கொண்டாடுவார்களாக. தமிழ் மொழியும் தமிழரின் கலைகளும் ஓங்கி வளர்வதாக.

இப்படிச் சலவை செய்தால் அடித்துத் துவைப்பதனாலுண்டாகும் நாசத்தைத் தடுக்கலாம்



பழைய முறையில ஆடைகளை அடித்துத் துவைத்துச் சலவை செய்வதால் துவாரங்கள், கிழி சல், கரையோரமாகத் தையல விட்டுப்போதல் . . . முதலிய அனாவசியமான வீண் செலவிற் குரிய காரணம் ஏற்படுகிறது.



1

ஆடைகளைப் பாழ் படுத்தாமல் எப்படித் துவைத்துச் சலவை செய்வதென்று இப் படங்கள் உங்களுக்குக் காட்டுகின்றன. (1) சலவை செய்யவேண்டிய உடையை நன்கு நனையுங்கள் — குழாய், தொட்டி, குளம், ஆறு அல்லது ஓடை ஆகிய இவற்றை நீங்கள் உபயோகிக்கலாம். அதனால் யாதொரு வித்தியாசமும் இல்லை. (2) நன்கு உடை நனைந்தபிறகு, ஸன்லைட் சோப்பை அதன்மீது முழுவதும் தேயுங்கள். (அழுக்கேறின பாகத்தில் ஸன்லைட்டைத் தாராளமாகத் தடவவும்). (3) சோப் போடப்பட்ட உடை முழுவதும் பரவ கசக்கவும் (சப்பாத்தி செய்ய மாவை எப்படி நீங்கள் பிசைவீர்களோ அப்படிச் செய்யவும்) துணியின் இழையில் சோப் நுரை படும்படி அதை முழுவதும் கசக்கிப் பிழியுங்கள். முரட்டுத்தனமாக துணியைத் துவைத்து கசக்கவேண்டிய அவசியமே இல்லை. அழுக்குள்ள இடங்களிலெல்லாம் நுரை படும்படி தேய்த்துக் கசக்கினால், ஸன்லைட்டின் சுயமாக வெளுக்கும் நுரை எல்லா அழுக்கையும் மெதுவாகப் போக்கிவிடும். இந்த சக்தி வாய்ந்த நுரையிலுள்ள "சிறந்த" சோப் பட்டமாத்திரத்தில் அழுக்கு உடனே நீங்கிவிடுகிறது. ஆடையிலுள்ள அழுக்கு நீங்கிப் போய் நுரையிற் சேர்ந்துவிடுகிறது. ஆகையினாலே, துணியை நுரையிலிருந்து அலசிக் கழுவும்போதே அழுக்கையும் நீங்கள் அகற்றிவிடுகிறீர்கள். (4) அழுக்கு இப்பொழுது அடங்கியிருக்கிற நுரையை ஆடையிலிருந்து போகும்படி நன்கு அலசிச் சுத்தம் செய்யுங்கள்.

இந்த மிருதுவான ஸன்லைட் முறைப்படி துணிகளைச் சலவை செய்தால் அவை வெகுநாளைக்கு நீடித்துவரும்.




2

3

4

ஸன்லைட் சோப் துணிகளைப் பாதுகாக்கிறது



LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி

மலர் 5 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 23

என்ன சேதி?

குறுக்கு வழி

இந்திய சர்க்காரையும் நாம் சில சமயங்களில் பாராட்ட வேண்டியதாக வந்து சேருகிறது. நம்முடைய புகழ்ச்சியையும் பாராட்டுதலையும் பெறுவதற்கு அவர்கள் இப்போது ஒரு குறுக்கு வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். நல்லது செய்யத் தெரியா விட்டாலும், ஏதாவது ஒரு கெட்ட காரியத்தைச் செய்யத் தொடங்கி, "பாருங்கள், இதை நீங்கள் அநுபவிக்கப் போகிறீர்கள். உங்களை விடப் போவதில்லை" என்கிறார்கள். "ஐயோ, இது பெரும் அநியாயம்! அநீதி!" என்று நாம் கத்துகிறோம். உடனே சர்க்கார் நம்மைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "பிழைத்துப் போங்கள்" என்று அந்தக் காரியத்தை நிறுத்தி விடுகிறார்கள். நாமும் சர்க்காரின் கருணையையும் உதார குணத்தையும் பாராட்டி மகிழ்கிறோம்.

அழியாப் புகழ்

சென்ற வருஷம் ஜப்பானியர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் மாத்திரமல்லாமல் பொதுவாக எல்லோருக்குமே ஆகாத வருஷம். தமிழ் நாட்டு அரசியலிலும் இந்தியாவின் அரசியலிலும் பல குழப்பங்களும் கிளர்ச்சிகளும் ஏமாற்றங்களும் நிகழ்ந்து எல்லோருடைய மனதிலும் அதிருப்தியை உண்டாக்கின. அவற்றில் இந்திய தேசிய ராணுவ விசாரணையும் ஒன்றாகும்.

மேற்படி இந்திய தேசிய ராணுவத்தைப் பற்றி நமக்கு அதிகமாக எதுவும் தெரியாமலிருந்தது. ஸ்ரீ சுபாஷ் போஸின் தலைமையிலே ஒரு இந்திய சைன்யம் இருக்கிறது என்றும் அது அரக்கான் போரிலும் கொஹிமாப் போரிலும் பிரிட்டிஷ் சைன்யத்தை எதிர்த்துப் போரிட்டது என்பதுமே அதைப்பற்றி நமக்குத் தெரிந்த விஷயங்களாகும். இரண்டு மூன்று வருஷம் சுதந்திர யுத்தத்திலே ரத்தத்தைச் சிந்தியும் அந்தச் சைன்யத்துக்குக் கிடைக்காத புகழையும் பெருமையும் நம்முடைய இந்திய சர்க்கார் அதற்குக் கொடுக்கத் தொடங்கினார்கள். இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த மூன்று வீரர்களை டில்லி செங்கோட்டையில் விசாரிக்கத் தொடங்கியதும், தேசமெங்கும் மின்சார சக்தியைப் போன்ற கிளர்ச்சியும் பரபரப்பும் உண்டாயிற்று. அந்த மூன்று வீரர்களுக்கும் என்ன ஆகுமோ என்று கலங்கினார்கள். விசாரணையை நிறுத்தும்படியாகப் பலர் வேண்டிக் கொண்டார்கள். ஆனால், சர்க்கார் அதற்கு இணங்கவில்லை. காப்டன் ஷா நவாஸுக்கும், ஸெகாலுக்கும், தில்லானுக்கும் இந்திய சர்க்கார் மூலம் அழியாப் புகழ் கிடைக்கவேண்டுமென்று இருக்கும்போது, வழக்கு விசாரணையை எப்படி நிறுத்தி விட முடியும்?

அரைகுறை ஏன்?

விசாரணை நடந்தது. புலாபாயின் அற்புதமான வாதத் திறமையைக் கண்டு மகிழ்ந்தோம். இந்தியர்களுடைய அற்புத நியாய வாதத் திறமை ஏகாதிபத்தியத்திற்கு எப்படி உதவுகிறது என்பதை சர்க்கார் தரப்பு வக்கீல் சர் என். பி. இஞ்ஜினியர் மூலமும் தெரிந்து கொண்டோம். ஒவ்வொரு நாளும் ஜனங்களின் பரபரப்பும் குழப்பமும் அதிகமாகி வந்தன. கடைசியாக மேற்படி இராணுவ வழக்கு, புது வருஷத்திலே மங்களகரமாக முடிந்திருக்கிறது. மேற்படி மூன்று வீரர்களுக்கும் ராணுவக் கோர்ட் விதித்த ஆயுள் தண்டனையை இந்திய சேனாபதி ரத்து செய்து அவர்களை விடுதலை செய்திருக்கிறார்.

இத்தகைய நல்ல காரியத்தை அவர்கள் முன்னாலேயே செய்திருக்கலாம். விடுதலை

புது வருஷப் போக்கு



இ.தே.ரா. வீரர்களை விடுதலை செய்க
இந்தியக் கோரிக்கைக்கு பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் தலைவணங்குகிறது.
ஷாநவாஸ் டில்லன் ஸெகால் விடுதலை
ஏகாதிபத்திய மிரட்டலுக்குப் பயப்படாமல் கீழ்நாடுகள் எதிர்த்து நிற்கின்றன.
டச்சு ஏகாதிபத்தியம்.
இந்தோனேஷியா
வசை பாணங்களும் அவதூறு அம்புகளும் ராஜாஜியை ஒன்றும் செய்ய முடியாமல் செல்கின்றன.
மகாத்மா காந்தி அஹிம்சா தர்மத்தில் தமது பரிபூரண நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.
“பலாத்காரமோ, அஹிம்சையோ, எதுவாயிருந்தாலும் பிரிட்டன் வெளியேறியே தீரவேண்டும்!” என்கிறார் பண்டித நேரு.
நேரு
பிரிட்டன்

-உம்மன்


மாஸ்கோ மூவர் மகாநாட்டில் ருஷியா
தயாரித்த நிபந்தனைகளுக்கு அமெரிக்காவும்
பிரிட்டனும் 'தஸ்து' போட்டன.
என் நிபந்தனைகளின்படியே
மூவர் சமரசம்
அட்லி
ட்ரூமன்
ஸ்டாலின்
ய விஞ்ஞானிகள் அமெரிக்க அணுகுண்டை விட
க சக்தியுள்ள அணுகுண்டைத்
ரித்திருக்கிறார்கள் என்றும் செய்தி அமெரிக்காவிலும்
டனிலும் கவலையை உண்டாக்கியிருக்கிறது.
"வாஸ்தவமாயிருக்குமா?"
சியாங்-கே-ஷேக் சீனக்
கம்யூனிஸ்டுகளுடன்
சமரசத்திற்காக
இறங்கி வருகிறார்.
சியாங்-கே-ஷேக்
கம்யூனிஸ்ட்
ன் எண்ணெயை பிரிட்டன்
பாகமாய் அடைவதற்கு ருஷியா
க்கே நிற்கிறது.
ஈரான்
எண்ணெய்
ருஷியா
டன்

செய்வதென்பது சர்க்காரின் உத்தேசமாயிருக்கும்போது, விசாரணை செய்யாமலேயே விடுதலை செய்திருக்கலாம். மேற்படி அநாவசியமான விசாரணையின் மூலம் இந்திய மக்களின் மனநிலை குழப்பத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியிருக்க வேண்டியதில்லை. வக்கீல் தொழிலை விட்டுப் பல வருஷமான பிறகு, மீண்டும் கவுன் போட்டுக்கொண்டு கோர்ட்டிலே ஆஜராக வேண்டிய சிரமத்தைப் பண்டித நேருவுக்குக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. ஆனால், நாம் முன்னாலே சொன்னது போல, இந்திய சர்க்கார் புகழடைவதற்கு ஒரு குறுக்கு வழியைக் கண்டு பிடித்திருக்கின்றனர். நல்லது செய்யத் தெரியா விட்டாலும், கெட்டது செய்து விட்டுத் திருத்திக் கொள்ளுகின்றனர். அந்த வரையில் சந்தோஷந்தான்.

ஆனால் இப்படிப்பட்ட நல்ல காரியத்தை அரையும் குறையுமாகச் செய்வதிலே லாபம் என்ன? மற்ற இந்திய தேசிய ராணுவ வீரர்கள் மீதிருக்கும் வழக்குகளையும் வாபஸ் வாங்கிக்கொண்டு அவர்களனைவரையும் விடுதலை செய்து, இந்திய சர்க்கார் நம்முடைய பாராட்டுதலை முழுசாகப் பெற்றுக் கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

‘ஜே ஹிந்த்!’

பாரத நாட்டை பிரிட்டிஷாரிடமிருந்து கைப்பற்றி டில்லியில் சுதந்திரக் கொடியை உயர்த்தும் நோக்கத்துடனே மலாய் — பர்மாவிலிருந்து புறப்பட்ட இ. தே. ரா. படையினர் தங்களுடைய போர் முழக்கமாக ‘ஜே ஹிந்த்!’ என்னும் கோஷத்தைக் கைக் கொண்டார்கள். அவர்களுடைய பிரயத்தனம் வெற்றி பெறவில்லையென்றாலும், அவர்களுடைய போர் முறையை நாம் ஒப்புக் கொள்ளவில்லையானாலும், அவர்களின் சிந்தைத் துணிவையும் தேச பக்தி ஆர்வத்தையும் சுதந்திர வெறியையும் நாம் பாராட்டத்தான் செய்கிறோம். அவர்களுடைய யுத்த கோஷமாகிய ‘ஜே ஹிந்த்’ கோஷத்தின்மேல் நமக்கு மோகம் உண்டாவதும் இயல்பே யாகும்.

எனினும் புதிய ‘ஜே ஹிந்த்!’ கோஷத்தின் முழக்கத்தில் நமது பழைய தாரக மந்திரமாகிய ‘வந்தேமாதர’ கோஷத்தை நாம் கைவிட்டு விடக்கூடாது.

“வந்தேமாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ?”

என்று பாரதியார் பாடியிருப்பதையும் மறந்துவிடக் கூடாது. நேதாஜி சுபாஷ் மீது புதிதாக ஏற்பட்டிருக்கும் பக்தி காரணமாக, பாரத நாட்டுக்குப் புத்துயிர் தந்த அஹிம்சாமூர்த்தி காந்தியடிகளையும், அவரிடம் நமது பக்தியைக் காட்டுவதற்குரிய ‘மகாத்மா காந்திக்கு ஜே!’ என்ற கோஷத்தையும் புறக்கணிக்கக் கூடாது.

மயிலாப்பூரில் நடந்த கூட்டம் ஒன்றில் ராஜாஜி மேற்கண்ட விஷயத்தைத்தான் விளக்கிக் கூறினார். அதோடு, அர்த்தம் தெரியாத ஹிந்தி பாட்டுக்களைத் தப்புந் தவறுமாகப் பாடவேண்டாமென்றும், அதைக் காட்டிலும் பாரதியாரின் தேசிய ஆவேசம் ததும்பும் தமிழ்ப் பாடல்களை நன்றாய்க் கற்றுக் கொண்டு பாடும்படியும் கூறினார்.

இதை வியாஜமாக வைத்துக்கொண்டு சில பத்திரிகைகள் ராஜாஜியின் மீது அநாகரிகமான வசைமொழிப் பாணங்களைப் பிரயோகம் செய்திருக்கின்றன. ஆனால் ராஜாஜியை இம்மாதிரி பத்திரிகைகள் துராக்கிரஹமாகத் தாக்குவது புதிய விஷயமல்ல. ஸ்ரீ கிருஷ்ண பகவான், ஏசுநாதர் முதலிய அவதார புருஷர்களைப் போல், வசைமொழிகளுக்கும் அவதூறுகளுக்கும் உள்ளாவது ராஜாஜியின் ஜாதக விசேஷம். ஆனால் எத்தகைய தாக்குதல்களையும் தாங்கக்கூடிய சாந்தம் என்னும் பிரம்ம தண்டத்தை ராஜாஜி பெற்றவராயிருப்பதால், அவரிடம் அன்பு கொண்ட பொது மக்கள் மேற்படி வசைகளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

சக்தியின் ஜீவன்

தமிழ் நாட்டில் சில காலமாக நாடகக் கலை புத்துயிர் பெற்று வருகிறது. பழைய நாடக சபைகளும் புதிய நாடக சபைகளும் போட்டியிட்டு நாடகக் கலையை வளர்த்து வருகின்றன. அத்தகைய புதிய நாடக சபைகளில் “சக்தி நாடக சபை” சிறப்புற்று விளங்குகிறது. இச்சபையார் தற்சமயம் திண்டுக்கல் நகரில் “ஜீவன்” என்னும் நவீன தேசியக் கருத்துகள் அடங்கிய நாடகத்தைப் புகழுடன் நடத்தி வருகிறார்கள். இம்மாதம் 20உ ஞாயிற்றுக் கிழமையன்று மேற்படி சபையார் நடத்தும் “ஜீவன்” நாடகத்திற்கு வரும் வசூலாகும் தொகையைக் கப்பலோட்டிய வீரத் தமிழர் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை நிதிக்குக் கொடுக்கத் தீர்மானித்திருப்பதறிந்து மகிழ்கிறோம். திண்டுக்கல்லிலும் அக்கம் பக்கத்திலும் உள்ள தேசபக்தத் தமிழர்கள் அனைவரும் மேற்படி “சக்தி” நாடக சபையின் சிறந்த நோக்கத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்கும் பரிசு பெற்றவர்! ஆ. கே. சுப்ரமண்யன், 104, பவழக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

வந்து விட்டோம்!

"வர வேண்டாம், வர வேண்டாம்!" என்று நாம் எவ்வளவோ சொன்னோம்.

ஆனால், அவர்கள் அதையெல்லாம் பொருட்படுத்த வில்லை!

உலகத்துக்கு நன்மை செய்வதென்று கிளம்பும் இலட்சிய வாதிகளும், முனி புங்கவர்களும், தீர்க்கதரிசிகளும் மற்ற வர்களுடைய விருப்பு வெறுப்புக்களை லட்சியம் செய்யமாட்டார்கள் அல்லவா?

யார் என்ன சொன்னபோதிலும், அவர்கள் கருமத்திலேயே கண்ணாயிருப்பார்கள்.

ஆகவே, "இதோ வந்துவிட்டோம்!" என்று சொல்லிக் கொண்டு வந்து விட்டார்கள்.

ஆகாசப் பிரயாணம் செய்து அவசர மாக வந்திருக்கிறார்கள்.

ஒன்று, இரண்டு, மூன்று... நன்றாக எண்ணிக் கொள்ளுங்கள்!— மொத்தம் பத்துப் பேர் வந்திருக்கிறார்கள்.

வந்தவர்களில் ஒருவர் பெண்மணி; மற்றவர்கள் ஆண் பிள்ளைகள்.

ஆண் பிள்ளைகளில் சிலருக்கு மீசை உண்டு; சிலருக்கு மீசை யில்லை.

சிலர் பழைய கன்சர்வேடிவ் கட்சி யினர்; சிலர் 'தொழிற் கட்சி' என வழங்கும் புதிய கன்சர்வேடிவ் கட்சி யைச் சேர்ந்தவர்கள்.

இந்தியாவின் ஆருயிர் நண்பராகிய ஸோரென்ஸன் துரையும் அவர்களில் ஒருவர். நன்றாய்ப் பார்த்துக் கொள் ளுங்கள். கழுத்தில் மாலையுடன் விளங்குகிறவர்தான் ஸோரென்ஸன் துரை. மாலை, நூல் மாலை. ஸோரென் ஸன் இந்தியாவின் சார்பில் காமன்ஸ் சபையில் போட்டிருக்கும் கணக்கற்ற கேள்விகளையெல்லாம் மனதில் வைத் துக் கொண்டு யாரோ ஒரு நன்றியுள்ள இந்தியர் அவருக்குக் கையால் நூற்ற நூல் மாலை போட்டு வரவேற்றிருக்கிறார்.

ரொம்ப சந்தோஷம்.

* * *

நல்லது; மேற்படி தூதுகோஷ்டி யைச் சேர்ந்த பத்துப் பேரும் இந்தியா விற்கு எதற்காக வந்திருக்கிறார்கள்?

அது நமக்குத் தெரியவில்லை.

அவர்களை அனுப்பிய இந்தியா மந்திரி பெதிக் லாரன்ஸ் அதைப் பற்றி நமக்குச் சொல்லவில்லை.

தூது கோஷ்டியில் வந்திருக்கும் பத்துப் பேருக்குமாவது தாங்கள் எதற் காக வந்திருக்கிறோம் என்று தெரிந் திருக்குமா?

நமக்கு எங்கே சந்தேகமோ, அங்கே தான் அவர்களுக்கும் சந்தேகம் என்று தோன்றுகிறது.

புது டில்லி நகருக்கு அவர்கள் வந்து சேர்ந்த அன்றைக்கே நமது பத்திரிகை நிருபர்கள் அவர்களை வளைத்துக் கொண்டு மேற்படி கேள்வியைப் போட் டார்கள். அதாவது "எதற்காக வந் தீர்கள்?" என்று அப்பட்டமாய்க் கேட்டார்கள்.

அதற்கு ஏதேனும் சரியான பதில் வந்ததா? பத்துப் பேரில் யாராவது சொன்னார்களா? அதுதான் கிடையாது.

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்லித் தட்டிக் கழித்தார்களே தவிர, வெட்டு ஒன்று துண்டு இரண்டுமான பதில் யாரும் சொல்லவில்லை.

தூதுகோஷ்டியின் தலைவர் ஆசிரியர் ரிச்சர்ட்ஸ், "இந்தியாவின் நன்மை களை அடுத்த சில மாதங்களுக்குள் அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் எல்லாரும் ஆவலுள்ளவர்களாயிருக் கிறோம்" என்று தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் தோரணையில் பதில் சொன்னார்.

இந்தியாவிற்கு இங்கிலீஷ்காரர்கள் செய்யக்கூடிய நன்மை அப்படி என்ன இருக்கிறது? ஒன்றே ஒன்றுதான் இருக் கிறது! அது இந்த நாட்டை விட்டுப் போக மூட்டை கட்டுவதுதான். அப் படிச் செய்வதாக உத்தேசமுண்டா? அதற்கு இந்தத் தூதுகோஷ்டி ஏற்பாடு செய்யுமா? — இதற்குப் பதில் ஒன்றும் வரவில்லை.

கன்ஸர்வேடிவ் அங்கத்தினர் மிஸ்டர் நிகல்ஸன் தம்முடைய மனதை இன் னும் கொஞ்சம் விசாலமாகத் திறந்து, மனதிலுள்ள விஷயத்தை ஒருவாறு வெளிப்படுத்தினார்:—

"நாங்கள் பத்துப் பேர், ஒருவரும் அறியாத அப்பட்டமான பேர்வழிகள்;



''நாங்கள் பத்துப் பேர் வந்திருக்கிறோம்; எண்ணிக் கொள்ளுங்கள்!''

பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்து வந்திருக்கிறோம். இந்தியாவின் சிநேகத்தையும் சமரசத்தையும் வேண்டி எங்கள் வலது கையை இதோ நீட்டுகிறோம். ரொம்பவும் கஷ்டமான ஒரு நிலைமையைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ளத் தாழ்மையோடு பிரயத்தனம் செய்யப் போகிறோம்!''

இப்படியாகக் கன்ஸர்வேடிவ் நிக்கல்ஸன் சொன்னார். இதிலிருந்து தூது கோஷ்டி வந்த நோக்கம் இன்னதென்று ஏதாவது தெளிவாகிறதா? ஆம்; முதலாவது இந்தியாவின் சிநேகத்தை வளர்த்துக் கொள்ள வந்திருக்கிறார்கள். இரண்டாவது, கஷ்டமான நிலைமையைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ள வந்திருக்கிறார்கள்.

இந்த இரண்டு விஷயத்தையும் நினைக்க நினைக்க நமக்குப் பயமாயிருக்கிறது.

சென்ற இருநூறு வருஷமாக பிரிட்டனும் இந்தியாவும் சிநேகமாயிருந்து வந்திருக்கின்றன. ஆனால், இந்த சிநேகம் எப்படிப்பட்டது? 'நீ அவல் கொண்டுவா! நான் உமி கொண்டு வருகிறேன்! இரண்டையும் கலந்து ஊதிப் புடைப்போம். புடைத்த அவல் எனக்கு; உமி உனக்கு' என்ற ரீதியில் பிரிட்டன் இத்தனை நாளும் இந்தியாவுடன் சிநேகம் கொண்டாடி வருகிறது.

ஆகவே, இந்தியாவின் சிநேகத்தைப் பிரிட்டன் விரும்புகிறது என்ற பேச்சே நமக்குப் பீதி உண்டாக்குகிறது.

அதிலும், 'வலது கையை நீட்டுகிறோம்' என்று சொல்லும் போது ரொம்ப ரொம்பப் பயமாயிருக்கிறது. ஏனென்றால், வலது கையானது நமது சிநேகத்தைக் கோரி நீட்டப்பட்டிருக்கையில், இடது கை என்ன செய்யுமோ, என்னமோ? பழைய அநுபவங்களை உத்தேசித்துப் பார்த்தால், இடது கை நமது சட்டைப் பையைத் துளாவி அதிலுள்ள கால் ரூபாய் அரைக் கால் ரூபாயைத் தஸ்கரம் செய்யலாமல்லவா?

போகட்டும்; தூது கோஷ்டியின் இரண்டாவது நோக்கம் என்னவென்று விசாரிப்போம். 'கஷ்டமான நிலைமையின் உண்மைகளை அறிந்து கொள்ள முயல்வோம்' என்று நிக்கல்ஸன் சொல்கிறார் அல்லவா?

அந்தக் 'கஷ்டமான நிலைமை' என்பது என்ன? அதைப் பற்றி என்ன உண்மைகளைத் தெரிந்து கொள்ளப் போகிறார்கள்? தெரிந்து கொண்ட பிறகு என்ன செய்யப் போகிறார்கள்?

'கஷ்டமான நிலைமை' என்னும் போது, இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதில் உள்ள கஷ்டமான நிலைமையைத்தான் மிஸ்டர் நிக்கல்ஸன் குறிப்பிடுகிறார்.

அந்தக் கஷ்டமான நிலைமையின் உண்மைகள் எல்லாம் நமக்கு நன்றாகத் தெரிந்தவையேதான்.

அதாவது, ஜனாப் ஜின்னா அவர்களின் பாகிஸ்தான் பிரச்னை.

டாக்டர் அம்பேத்கார் கிளப்பும் தாழ்த்தப்பட்ட வகுப்பார் பிரச்னை.

அப்புறம், சுதேச சமஸ்தானங்களின் பரிய பிரச்னை.

பிறகு, பிரிட்டிஷ் மூலதனத்தின் ரம்மாண்ட பிரச்னை.

மேற்படி பிரச்னைகளினால் இந்தியாக்குச் சுதந்திரம் கொடுக்கும் விஷயம் ராம்ப ரொம்பக் கஷ்டமாய்ப் பாயிருக்கிறதல்லவா?


அத்தகைய கஷ்டமான நிலைமையைப் பற்றித்தான் தூது கோஷ்டியார் ஆராய்ச்சி செய்து உண்மைகளைக் ண்டு பிடிக்கப் போகிறார்கள் போலும்!

எல்லா உண்மைகளையும் சாங்கோரங்கமாக ஆராய்ந்து கண்டு பிடித்த றகு, முக்கியமான கடைசி உண்மையையும் ஒரு வேளை கண்டு பிடித் ஈலும் கண்டு பிடிப்பார்கள்.

அதாவது, "மேற்படி பிரச்னைகள் எல்லாம் கக் கஷ்டமான பிரச்னைகளாயிருப்பதால், வை யெல்லாம் தீரும் வரையில் இந்தியாக்குச் சுதந்திரம் வழங்குவது சாத்தியமில்லை; வை தீரும் வரையில் இந்தியா பிரிட்டிஷ் ட்சியிலேயே இருந்து வரவேண்டியது ன்!" என்று தீர்மானிப்பார்கள்.

இதற்கு முன்பு இந்தியாவுக்குப் பிரிட் னிலிருந்து வந்த தூதர்கள் எல்லாரும் பரும்பாலும் மேற்படி கடைசி உண்மையைக் கண்டு பிடித்துக் கொண்டு ான் திரும்பிச் சென்றார்கள்.

அப்படியிருக்க நானது 1946-ம் ருஷத்தில் இந்தியா வந்திருக்கும்



இந்தியாவைப் பற்றிக் கேள்வி கேட்பதில் இணையற்ற மிஸ்டர் ஸோரென்ஸன்.

பத்துப் பேர் மட்டும் அதைக் கண்டு பிடிக்காமல் போய் விடுவார்களா?

அப்படிப் பட்ட விபத்து நேர்ந்து விடும் என்று தோன்றவில்லை.

ஏனெனில், தூது கோஷ்டியார் சரியான முறையிலேதான் தங்களுடைய காரியாதிகளைத் தொடங்கியிருப்பதாகக் காணப்படுகிறது.

புது டில்லி வந்ததும் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்கள். பிறகு, வைஸிராய் அரண்மனையில் விருந்துண்டார்கள். பின்னர், டில்லிக்குச் சுற்றுப் புறங்களிலுள்ள கிராமங்களுக்கு இரண்டு இரண்டு பேராகச் சென்றார்கள். வழியில் சாலை ஓரத்து மரங்களில் குரங்குகள் விளையாடுவதைப் பார்த்தார்கள். பின்னர், கிராமங்களிலே உள்ள கிராமவாசிகளைக் கண்டு அவர்களைக் கேள்வி கேட்டுப் பதில் பெற்றார்கள்.

ஜனாப் ஆஸப் அலியைச் சந்தித்து தொண்ணூறு நிமிஷம் பேசினார்கள்.

மௌலானா ஆஸாத், மகாத்மா காந்தி, பண்டித நேரு, ஜனாப் ஜின்னா, டாக்டர் அம்பேத்கார், ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் முதலியவர்களை யெல்லாம் பார்க்கப் போகிறார்கள்.

இன்னும் மாகாண கவர்னர்களையும் ஐ. ஸி. எஸ். காரர்களையும் அவசியம் பார்க்கத்தான் போகிறார்கள்.



ாஷ்டி பத்துப் பேரில் ஏக பெண்மணி இவர்; மிஸ்ஸஸ் மூரியல் வால்ஹௌட் நிக்கால்.

இவ்வளவுக்கும் பிறகு, அதாவது இந்தியாவிலே ஐந்து வார காலம் பத்துப் பேர் சேர்ந்தும் தனித்தனியாகவும் சுற்றுப் பிரயாணம் செய்து உண்மைகளைக் கண்டு பிடித்தபிறகு, "இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பது சாத்தியமில்லை" என்ற உண்மையை அவர்கள் கண்டு பிடிக்கா விட்டால், உலக சரித்திரத்திலேயே அது ஒரு அற்புதம் என்றுதான் முடிவு செய்ய வேண்டி வரும்.

இன்னும் சொல்லப்போனால் மேற்படி தூது கோஷ்டியார் இங்கிலாந்திலிருந்து கிளம்பும்போதே, தங்களுடைய சட்டைப் பையில் மேற்படி உண்மையை, (அதாவது "இந்தியாவில் சமூகப் பிரச்னை முதலிய பல கஷ்டமான பிரச்னைகள் இருப்பதால் பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேற முடியாது" என்ற உண்மையை,) எழுதிப் போட்டுக் கொண்டு வந்திருக்கலாம். தங்கள் சட்டைப் பையில் ஏற்கனவே உள்ள உண்மைக்குத் தக்க ஆதாரங்கள் கண்டு பிடிப்பதற்கே அவர்கள் இத்தனை பிரயாசைப் படுகிறார்கள் என்றும் ஊகிக்கலாம்.

எவ்வளவோ கஷ்டமான கணக்காயிருந்தாலும் அதற்கு விடை முதலிலேயே தெரிந்திருந்தால், சரியான வழி கண்டு பிடித்து எப்படியாவது போட்டு முடித்து விடலாமல்லவா?

எதிர்பாராத அதிசயம் நடந்து விடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அதாவது, "இந்தியா சுதந்திரத்துக்கு லாயக்கில்லை" என்ற உண்மையை மேற்படி தூது கோஷ்டியினர் கண்டுபிடிக்க முடியவில்லை என்று வைத்துக்கொள்வோம்.

அப்படியானால் அதற்கு மாறாக வேறொரு உண்மையையாவது அவர்கள் கண்டுபிடித்தே தீரவேண்டும்.

அந்த வேறொரு உண்மை பின் வருவதுதான் :—

"பிரிட்டிஷார் என்றைய தினம் இந்தியாவைக் காலி செய்துவிட்டு வெளியேறுவது என்று முடிவு செய்கிறார்களோ, அன்றைய தினமே இந்தியாவின் சகலமான பிரச்னைகளும் தீர்ந்துவிடும். இன்று மிகக் கஷ்டமாகத் தோன்றும் நிலைமை மிக்க எளிதாகிவிடும். சாதி சமயப் பிரச்னை, சுதேச மன்னர் பிரச்னை, பிரிட்டிஷ் மூலதனப் பிரச்னை எல்லாம் மாயமாய் மறைந்துவிடும்."

இந்த இரண்டாவது உண்மையை ஒருவேளை பிரிட்டிஷ் தூது கோஷ்டியார் கண்டுபிடிக்கும் பட்சத்தில், அது இந்த உலகத்துக்கே அதிர்ஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும்.

பார்க்கலாம்; உலகத்துக்கு அத்தகைய அதிர்ஷ்டம் வந்துவிடப் போகிறதா என்று ஒரு மாதம் வரையில் பொறுத்திருந்து பார்க்கலாம்.

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 15

குலச்சிறையார்

உயர்தர நவீனத்தின் இலக்கணம் அறிந்த இலக்கியப் புலவர்கள், 'கதையின் முற்பகுதியிலேயே கதா பாத்திரங்கள் எல்லாரும் வந்துவிட வேண்டும்; கதையின் பிற்பகுதியிலே புதிய பாத்திரங்களைக் கொண்டு வரக் கூடாது; அப்படிக் கொண்டு வந்தால் கதையின் சுவை கெட்டுப் போகும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இலக்கணத்துக்கு மாறாக, இந்தக் கதையின் கடைசிப் பகுதியில் முக்கியமான கதா பாத்திரங்கள் சிலரை நான் கொண்டு வந்தே தீரவேண்டியிருக்கிறது. வெறும் கற்பனைக் கதையாக மட்டும் இருந்தால் மேற்படி புலவர்கள் கூறும் இலக்கணத்தை அனுசரித்து எழுதுவது சாத்தியமாயிருக்கலாம். உண்மைச் சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதும்போது, கதை இலக்கணத்தை மூட்டை கட்டி வைத்துவிட வேண்டியதாயிருக்கிறது. இதைக் குறித்து நேயர்களின் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு மேலே போகிறேன்.

* * *

சென்ற அத்தியாயத்தில் கூறியபடி மாமல்ல சக்கரவர்த்தி படையுடன் புறப்பட்டுச் சென்று மூன்று தினங்கள் ஆயின. காஞ்சிமா நகரத்தின் வீதிகள் வழக்கமான கலகலப்பு இல்லாமல் வெறிச்சென்று கிடந்தன. பட்டணமே தூங்கி வழிந்து கொண்டிருந்தது.

வழக்கத்துக்கு மாறான அந்தப் பகல் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு காஞ்சி நகர் வீதிகளில் ஒரு ரதம் கடகடவென்ற சப்தத்துடன் அதிவேகமாகப் பிரயாணம் செய்து திருநாவுக்கரசர் மடத்தின் வாசலில் வந்து நின்றது. ரதத்தை ஓட்டி வந்தவன் வேறு யாருமில்லை. நமது பழைய நண்பன் கண்ணபிரான்தான்.

ரதத்திலிருந்து நாம் இதுவரையில் பார்த்திராத புது மனிதர் ஒருவர் — இளம் பிராயத்தினர் — இறங்கினார். சிறந்த பண்பாடு, முதிர்ந்த அறிவு, உயர் குடிப் பிறப்பு ஆகியவற்றினால் ஏற்படும் களை அவர் முகத்தில் ததும்பியது.

கீழே இறங்கியவரைப் பார்த்துக் கண்ணபிரான், "ஆம், ஐயா! இதுதான் திருநாவுக்கரசரின் திருமடம். அதோ இருக்கும் பல்லக்கு புவனமகாதேவிக்கு உரியது. சக்கரவர்த்தியின் அன்னையார் சுவாமிகளைத் தரிசிக்க வந்திருக்கிறார் போல் தோன்றுகிறது" என்றான்.

"யார் வந்திருந்த போதிலும் சரி; தாமதிக்க நமக்கு நேரமில்லை!" என்று சொல்லிக் கொண்டு அந்தப் புது மனிதர் மடத்துக்குள்ளே நுழைந்தார்.

உள்ளே, உண்மையாகவே புவன மகாதேவியார் தமது வளர்ப்புப் பெண்ணாக ஏற்றுக் கொண்ட மங்கையர்க்கரசியுடன் வாகீசப் பெருந்தகையைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார். சுவாமிகள் வடநாட்டில் தாம் தரிசனம் செய்துவந்த ஸ்தலங்களின் விசேஷங்களைப் பற்றிப் புவனமகாதேவிக்குச்

சொல்லிக் கொண்டிருந்தார். எல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியில் தாம் மீண்டும் தென்னாட்டு யாத்திரை கிளம்பப் போவது பற்றியும் நாவுக்கரசர் தெரிவித்தார்.

"ஆம், தாயே! வடநாட்டில் எத்தனையோ ஸ்தலங்களைத் தரிசனம் செய்தேன். கயிலையங்கிரி வரையில் சென்றிருந்தேன். எனினும், நமது தென்னாட்டிலேயுள்ள க்ஷேத்திரங்களின் மகிமை தனியானதுதான். நமது ஏகாம்பரநாதர் ஆலயத்துக்கு இணையான ஆலயம் வேறு எங்கும் இல்லை. நமது திருத்தில்லை, திருவையாறு, திருவானைக்கா முதலிய க்ஷேத்திரங்களுக்கு இணையான க்ஷேத்திரங்களும் வேறு எங்கும் கிடையாது. மறுபடியும் தென்னாடு சென்று அந்த ஸ்தலங்களையெல்லாம் மீண்டும் தரிசித்துவிட்டு வர எண்ணியிருக்கிறேன். நாளைக்குப் புறப்படப் போகிறேன்!"

"சுவாமி! இந்தப் பிறவியில் எனக்கும் அத்தகைய பாக்கியம் கிடைக்குமோ, என்னமோ, தெரியவில்லை. மங்கையர்க்கரசி திருவாரூரைப் பற்றிச் சொன்னதிலிருந்து எனக்கு அந்த க்ஷேத்திரத்தைத் தரிசிக்க மிக்க ஆவலாயிருக்கிறது!" என்றார் மகேந்திர பல்லவரின் பட்டமகிஷி.

"ஏன், தங்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்காமற் போகவேண்டும்? தங்கள் திருக்குமாரர் திக்விஜயத்திலிருந்து வெற்றி மாலை சூடித் திரும்பி வருவார். பிறகு, தாங்கள் அவருடனே கிளம்பிச் சென்று இந்தப் புண்ணிய தமிழகத்திலுள்ள ஸ்தலங்களையெல்லாம் அவசியம் தரிசிக்கலாம்!" என்றார் சுவாமிகள்.

இப்படி அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது, மடத்தின் வாசலில் ரதத்திலிருந்து இறங்கிய இளைஞர் உள்ளே வந்தார். உள்ளே வந்தவரை முதலில் மங்கையர்க்கரசியும், பிறகு மற்ற இருவரும் பார்த்தார்கள்.

அந்த இளைஞர் பயபக்தியுடன் அவர்கள் அருகில வந்து, சுவாமிகளுக்கும் புவனமகாதேவிக்கும் வணக்கம் செலுத்தினார்.

"நீ யார் அப்பனே? எங்கு வந்தாய்?" என்று நாவுக்கரசர் கேட்ட குரலில் சிறிது அதிருப்தி தொனித்தது.

அந்தக் குறிப்பைத் தெரிந்து கொண்ட இளைஞர் கைகூப்பி நின்ற வண்ணம், "சுவாமி! மன்னிக்க வேண்டும். சக்கரவர்த்தியின் அன்னையார் இவ்விடம் விஜயம் செய்திருப்பது தெரிந்தும் முக்கிய காரியத்தை முன்னிட்டுப் பிரவேசித்தேன். அடியேன் வராக நதிக் கரையிலிருந்து வருகிறேன். அங்கே நெடுமாற பாண்டியர் கடுமையான தாபஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறார். இவ்விடமிருந்து சக்கரவர்த்தி அனுப்பி வைத்த நமசிவாய வைத்தியர் பாண்டியருக்கு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார். எனினும், தம்முடைய ஔஷதங்களினால் மட்டும் அவரைக் குணம் செய்ய முடியாதென்று நினைக்கிறார். தங்களிடமிருந்து மந்திரித்த திருநீறு வாங்கிக் கொண்டு வரும்படி சொன்னார். அதனால்தான் அவசரமாக வந்தேன் மன்னிக்க வேண்டும்" என்று திருநாவுக்கரசரைப் பார்த்துக் கூறிவிட்டு, புவனமகாதேவியின் பக்கம் திரும்பி, "தேவி! தாங்களும் க்ஷமிக்க வேண்டும்!" என்றான்.

அப்போது தேவி, "அப்பனே! நீ ரொம்ப விநயமுள்ளவனாயிருக்கிறாய். ஆனால் சுவாமிகள் முதலில் கேட்ட கேள்விக்கு நீ மறுமொழி சொல்லவில்லையே? நீ யார்?" என்று கேட்க, "பதட்டத்தினால் மறந்து விட்டேன், தேவி! பாண்டிய நாட்டில் மணமேற்குடி என்னும் கிராமத்தில் பிறந்தவன். என் பெயர் குலச்சிறை. படையுடன் கிளம்பிய பாண்டிய குமாரருக்கு ஓலை எழுதவும் படிக்கவும் உதவியாயிருக்குமாறு என்னை நியமித்து மதுரை மன்னர் அனுப்பி வைத்தார்!" என்றான் அந்த இளைஞன்.

"நோய்ப்பட்ட பாண்டிய குமாரரை வராக நதிக் கரையிலேயே ஏன் வைத்திருக்க வேண்டும்? ஏன் இவ்விடத்துக்கு உடனே அழைத்து வரவில்லை?" என்று தேவி மீண்டும் கேட்டார்.

"ரொம்பக் கடுமையான ஜுரம், தேவி! இந்த நிலையில் அவர் பிரயாணம் செய்யக் கூடாது என்பது வைத்தியரின் அபிப்பிராயம். கொஞ்சம் குணப்பட்டதும் இவ்விடத்துக்கு அழைத்து வந்து விடுகிறோம். அரண்

மனைக்கு வந்து சக்கரவர்த்தினியிடமும் செய்தி சொல்லிவிட்டுப் போக எண்ணினேன். நல்ல வேளையாக இங்கேயே தங்களை ......"

"அப்படியில்லை, அப்பா! என்னிடம் சொன்னால் மட்டும் போதாது. அரண்மனைக்கு வந்து வானமா தேவியிடமும் நேரில் சொல்லிவிட்டுத் திரும்பிப் போ! பாவம்! அவள் ஏற்கனவே மிக்க கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்" என்று புவனமகாதேவி சொல்லிக் கொண்டே எழுந்து, "சுவாமி! போய் வருகிறேன். விடை கொடுங்கள்!" என்றார்.


புவனமகாதேவியுடன் மங்கையர்க்கரசியும் எழுந்து சென்றாள். தந்தையினால் தன்னந்தனியே காஞ்சி அரண்மனையில் விடப்பட்ட அந்தப் பேதைப் பெண், குலச்சிறை உள்ளே வந்தது முதல் அவனுடைய முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவள், இப்போது வெளியேறு முன்னர் கடைசி முறையாக ஒரு தடவை பார்த்தாள். அப்போது குலச்சிறையும் அவளைப் பார்க்க நேர்ந்தது. இருவருடைய முகங்களிலும் கண்களிலும் ஏதோ பழைய ஞாபகத்தின் அறிகுறி தோன்றலாயிற்று.

ஒரு கணம் வியப்பினால் திகைத்து நின்ற குலச்சிறை, பெண்ணரசிகள் இருவரும் வெளியேறிய பின்னர், திருநாவுக்கரசரை மீண்டும் பார்த்து, "சுவாமி! மதுரையிலிருந்து நாங்கள் புறப்பட்டது முதற்கொண்டு வழியில் சிற்சில அபூர்வ சம்பவங்கள் நடந்தன. அவற்றைத் தங்களிடம் தெரிவிக்கும்படி நமசிவாய வைத்தியர் சொன்னார். அதனால்தான் நானே புறப்பட்டு வந்தேன். ஆக்ஞாபித்தால் சொல்கிறேன்!" என்றார்.

"சொல், தம்பி! நமசிவாய வைத்தியர் ஏதேனும் ஒரு விஷயம் சொன்னால் அதில் பொருள் இல்லாமல் இராது" என்றார் வாகீசர்.

குலச்சிறையார் கூறினார்:- "சுவாமி! சில காலமாகத் தென் பாண்டிய நாட்டிலே சமணர்களின் ஆதிக்கம் அதிகமாயிருக்கிறது. மகேந்திர பல்லவர் தங்களுடைய சிவபக்தி மகிமையால் சைவ சமயத்தைத் தழுவியதிலிருந்து பல்லவ நாட்டிலிருந்த சமணர்கள் எல்லாரும் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்துவிட்டார்கள். அவர்கள் தங்களிடமுள்ள மணிமந்திர ஔஷதங்களினாலும், மற்றும் அணிமா, மகிமா முதலிய சித்திகளின் சக்தியினாலும் பாண்டி நாட்டாரிடம் தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு வருகிறார்கள். ஜனங்கள் நோய் நொடிகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், மற்றும் காரியசித்தி அடைவதற்கும் சமண முனிவர்களைத் தேடிப் போவது வர வர அதிகமாகி வருகிறது. பாண்டிய மன்னரும் ஒருவாறு சமணர்களின் சக்திக்கு உட்பட்டுவிட்டார். சில காலமாக அரசர் ஆலவாய் இறைவன் திருக்கோயிலுக்குக் கூட வருவதில்லை. இளம் பாண்டியர் நெடுமாறன் மட்டும் இத்தனை காலமும் சமணர்களுடைய மாயவலைக்கு உட்படாமலிருந்தார். ஆனால் மதுரையிலிருந்து நாங்கள் படையுடன் கிளம்பியது முதல் நடந்த சில சம்பவங்கள் இளம் பாண்டியருடைய மனதையும் கலக்கி விட்டன. நாங்கள் புறப்பட்ட நாளிலிருந்து, அடிக்கடி வழியில் திகம்பர சமணர்கள் எதிர்ப்பட்டு வந்தார்கள். ஒரு காத தூரத்துக்கு ஒரு தடவையாவது சமணர் ஒருவர் எங்கள் முன் எதிர்ப்படாமல் இல்லை. அப்படி எதிர்ப்பட்டவர்களில் சிலர் இளம் பாண்டியரைப் பரிதாப நோக்குடன் பார்த்துப் பெருமூச்சு விட்டுப் போவார்கள். வேறு சிலர், 'அடாடா! என்ன அறிவு? என்ன ஆண்மை? என்ன முக தேஜஸ்? இவ்வளவும் வீணாகவா போகவேண்டும்? இந்த இளம் பிராயத்தில் இப்பேர்ப்பட்ட ஆர்க்கதியா நேர வேண்டும்?' என்று பாண்டியரின் காதில் விழும்படி முணுமுணுத்துவிட்டுப் போவார்கள். இப்படி ஒருவர் பின் ஒருவராகப் பலர் சொல்லவே, இளம் பாண்டியரின் மனதில் ஏதோ ஒருவகைப் பயம் உண்டாகிவிட்டது. தமக்கு ஏதோ ஆபத்து வரப்போகிறதென்றும் அதை முன் கூட்டித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் எண்ணினார். பிறகு வழியில் எதிர்ப்பட்ட சமண முனிவர்களை இவரே தடுத்து நிறுத்தித் தமக்கு என்ன நேரப்போகிறது என்று அவர்களைக் கேட்கத் தொடங்கினார். அவர்கள்

'வராக நதிக்கரையில் அது உமக்கு அறிவிக்கப்படும்' என்று சொல்லி விட்டுச் சென்றார்கள். சுவாமி! சமணர்களின் மாய சித்திகளைப் பற்றி நான் எவ்வளவோ சொல்லி இளம் பாண்டியரை நேரே காஞ்சிக்கு அழைத்துக் கொண்டுவர முயன்றேன். அது பலிதமாகவில்லை. வராக நதிக் கரையில் சைன்யத்துடன் தண்டு இறங்கினோம். இரண்டு நாள் ஒரு காரியமும் இல்லாமல் அங்கே தங்கியிருந்த பிறகு, விஜயதசமியன்றைக்கு முதல் நாள் நடுநிசியில் சமண முனிவர் ஒருவர் வந்து பாண்டியரைத் தனியாக அழைத்துச் சென்றார். நானும் கூட வருவதாகச் சொன்னதைப் பாண்டியர் கேட்கவில்லை. எங்கேயோ போய் இரவில் பெரும் பகுதி கழித்துவிட்டு வெள்ளி முளைத்த பிறகு திரும்பி வந்து சேர்ந்தார். மறுநாள் கடுமையான ஜுரம் வந்துவிட்டது. ஜுரத்தின் வேகத்தில் யுத்த களத்தைப் பற்றியும், புலிகேசியின் வதத்தைப் பற்றியும், பல்லவ குலத்தாரின் நன்றிகெட்ட தன்மை



யைப் பற்றியும் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தார். நான் மிக்க கவலையும் பயமும் அடைந்து என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையில், நல்ல வேளையாக இலங்கை இளவரசர் மானவன்மரும் நமசிவாய வைத்தியரும் வந்துசேர்ந்தார்கள். அவர்களைக் காவல் வைத்துவிட்டு, சமணர்களை அருகில் நெருங்கவிடாமலும் செய்துவிட்டு நான் ஓடோடியும் வந்தேன். சுவாமி! சமணர்களின் குகைக் கோயிலில் ஏதோ விபரீதமான



காட்சிகளைக் கண்டு இளம் பாண்டியர் பீதியடைந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. ஆகவே நமசிவாய வைத்தியரின் ஔஷதங்களோடு தங்களுடைய திருநீற்றுப் பிரசாதமும் சேர்ந்தால், பாண்டியருக்குச் சீக்கிரத்தில் குணமாகும் என்று நம்புகிறேன். நமசிவாய வைத்தியரும் அப்படியே அபிப்பிராயப்பட்டு என்னை அனுப்பினார்!"

இவ்விதம் குலச் சிறையார் கூறியதையெல்லாம் கவனமாகக் கேட்டு வந்த திருநாவுக்கரசர், "அப்பனே! எல்லாம் எனை ஆளும் எம்பெருமான் செயல்! அடியேனால் நடக்கக்கூடியது என்ன இருக்கிறது? என்றாலும், சிரித்துப் புரமெரித்த இறைவன் பெயரை உச்சரித்து இந்தத் திருநீற்றைக் கொடுக்கிறேன். எடுத்துக் கொண்டு போய் இடுங்கள். அடியேனுக்கு நேர்ந்திருந்த கொடிய சூலை நோயை ஒரு கணத்தில் மாயமாய் மறையச் செய்த வைத்தியநாதப் பெருமான் இளம் பாண்டியரின் நோயையும் குணப்படுத்தட்டும்" என்றார்.

நாவுக்கரசர் அளித்த விபூதியைப் பயபக்தியுடன் வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்ட குலச்சிறையார் மீண்டும், "சுவாமி! அடியேனுக்கு இன்னொரு வரம் அருள வேண்டும்" என்று பணிவுடன் கேட்டார்.

"கேள், தம்பி! உன்னுடைய பக்தி விநயம் என் மனதை ரொம்பவும் கவர்கிறது!" என்றார் வாகீசர்.

"தென் பாண்டி நாட்டில் சமணர்களின் ஆதிக்யம் அதிகமாகி வருகிறது என்று சொன்னேனல்லவா? சுவாமிகள் தங்கள் சிஷ்ய கோடிகளுடன் பாண்டிய நாட்டுக்கு விஜயம் செய்ய வேண்டும். விஜயம் செய்து, மக்களைச் சமணர் வலையில் விழாமல் தடுத்தாட் கொள்ள வேண்டும்! தமிழகத்தின் புராதன பாண்டிய வம்சத்தையும் சமணப் படுகுழியில் விழாமல் காப்பாற்ற வேண்டும்! ஆஹா! நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல், இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில் சமணம் ஏன் வந்தது, சுவாமி!......" என்று குலச்சிறை ஆவேசத்துடன் பேசி வந்தபோது, நாவுக்கரசர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அந்தப் பெருந்தகையார்

குலச்சிறையைக் கையமர்த்தி நிறுத்திக் கூறினார் :—"தம்பி! சமண மதத்தின் மீது அசாத்திய கோபம் கொண்டிருக்கிறாய். ஒரு காலத்தில் நானும் இப்படிக் கோபம் கொண்டிருந்தேன். ஆனால் இந்தக் காலத்துச் சமணர்கள் சிலர் செய்யும் காரியங்களுக்காக சமண சமயத்தின் மேல் துவேஷம் கொள்ளுதல் நியாயமன்று. அன்பையும் ஜீவகாருண்யத்தையும் போதிப்பதற்கு ஏற்பட்ட சமயம் சமண சமயம். நமது செந்தமிழ் நாடு அந்தக் காலத்தில் சமண முனிவர்களால் எவ்வளவோ நன்மைகளை அடைந்திருக்கிறது. சமண முனிவர்கள் தமிழ் மொழியை வளர்த்தார்கள். அரிய காவியங்களைத் தமிழில் புனைந்தார்கள். ஓவியக் கலையை நாடெங்கும் பரப்பினார்கள். தமிழகம் அவர்களால் எத்தனையோ நன்மை அடைந்திருக்கிறது......"

குலச்சிறை பொறுமை இழந்தவராய், "போதும், சுவாமி! போதும்! தங்களிடம் சமணர்களைப் பற்றிய புகழுரைகளைக் கேட்பேனென்று நான் எதிர்பார்க்கவில்லை. தொண்டை மண்டலத்தைச் சமணர்களிடமிருந்து காப்பாற்றிய தாங்கள் பாண்டிய நாட்டையும் காப்பாற்றியருளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள வந்தேன். இதற்காகவே, தங்களிடம் நானே சென்று திருநீறு வாங்கி வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன். தாங்கள் பழங் காலத்துச் சமணர்களைப் பற்றிப் புகழுரை கூறுகிறீர்கள். பழைய நாளில் சமணர்கள் எப்படி இருந்தால் இப்போது ஆவது என்ன? இந்த நாளில் அவர்கள் செய்யும் அட்டூழியங்களைத் தாங்கள் பாண்டிய நாட்டிற்கு வந்து பாருங்கள்!" என்று படபடப்பாகப் பேசினார்.

நாவுக்கரசர் சற்று நேரம் கண்களை மூடிய வண்ணம் ஆலோசனையில் இருந்தார். பிறகு, கண் திறந்து குலச்சிறையைப் பார்த்துக் கூறினார்:—"தம்பி! எனக்குப் பிராயம் ஆகிவிட்டது. இறைவன் திருவடி நீழலை அடைந்து அமைதி பெறும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். தந்திர மந்திரங்களில் வல்லவர்களான சமணர்களுடன் போராடுவதற்குச் சக்தியோ விருப்பமோ தற்போது என்னிடம் இல்லை. ஆனால், கேள் தம்பி! என்னுடைய அகக் காட்சியில் ஒரு அற்புதத்தை அடிக்கடி கண்டு வருகிறேன். பால் மணம் மாறாத பாலர் ஒருவர் இந்தத் தெய்வத் திருநாட்டில் தோன்றி அமிழ்தினும் இனிய தீந்தமிழில் பண்ணமைந்த பாடல்களைப் பொழியப் போகிறார். அவர் மூலமாகப் பல அற்புதங்கள் நிகழப் போகின்றன. பட்ட மரங்கள் தளிர்க்கப் போகின்றன. செப்பு பொன்னாகப் போகின்றது. பாஷாண்டிகள் பக்தர்களாகப் போகிறார்கள். அந்த இளம் பிள்ளையின் மூலமாகவே தென் பாண்டிய நாட்டிலும் சமணர்களின் ஆதிக்யம் நீங்கும்; சைவம் தழைக்கும்; சிவனடியார்கள் பெருகுவார்கள்!"

இவ்விதம் சுவாமிகள் கூறி வந்தபோது குலச்சிறையார் மெய்மறந்து புளகாங்கிதம் அடைந்து நின்றார். சுவாமிகள் பேச்சை நிறுத்தியதும் அவர் தன்னிலை அடைந்து, "சுவாமி! தங்கள் திருவாக்குப் பலிக்கட்டும். நான் போய் வருகிறேன். ஒரே ஒரு சந்தேகம் மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இங்கே நான் வரும்போது இருந்த பெண்ணரசிகள் இருவரில் மூத்தவர் புவனமகாதேவி என்று அறிந்து கொண்டேன். சிவபக்தியே உருவெடுத்தாற்போல் தோன்றிய மற்றோர் இளம் பெண் யாரோ? நான் தெரிந்து கொள்ளலாமென்றால், அருள் புரிய வேண்டுகிறேன்!" என்றார்.

"ஆம், தம்பி! சிவபக்தியே உருக்கொண்ட பெண்தான் அவள். கொடும்பாளூர்ச் சோழ வம்சத்தைச் சேர்ந்த செம்பியன் வளவனுடைய செல்வக் குமாரி. பெயர் மங்கையர்க்கரசி. இவளைப் புவனமகாதேவியிடம் ஒப்படைத்து விட்டு, இவள் தந்தையார் வாதாபிப் போருக்குச் சென்றிருக்கிறார். இந்தத் தெய்வக் களை பொருந்திய பெண் மூலமாகவும் நமது செந்தமிழ் நாடு ஏதோ ஒரு பெருஞ் சிறப்பை அடையப் போகிறது என்று சற்று முன்னால் எனக்குத் தோன்றியது!"

இதைக் கேட்ட குலச்சிறையாரின் முகபாவமானது, நாவுக்கரசரின் கூற்றை அவர் ஓரளவும் ஆமோதித்ததாகத் தெரியப்படுத்தியது.

எமது நன்றி



நவாப் ராஜமாணிக்கத்தின்

மதுரை தேவி பால விநோதை சங்கீத சபா

முகாம் — கோட்டயம்

அன்னை பராசக்தியின் பரிபூரண கிருபையாலும் தங்கள் எல்லோரது நல்லாசியாலும், எமது தேவி சபையின் 13-வது ஆண்டு விழாவும் அன்னதானமும் இனிதே நிறைவேறின.

பாரத நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் அநேக மகான்களும், பெரியோர்களும், திவான்கள், நீதிபதிகள் முதலான மற்றும் பிரபல உத்தியோகஸ்தர்களும், கலைஞர்களும், நண்பர்களும், பொதுமகா ஜனங்களும் எமக்கு அனுப்பியிருக்கும் வாழ்த்துச் செய்திகளுக்குத் தனித் தனியே பதில் எழுத முடியாதிருப்பதை முன்னிட்டு எமது இதய பூர்வமான வந்தனத்தையும், நன்றியறிதலையும், இதன் மூலமாக அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் எல்லோரது அன்பும், ஆதரவும், ஆசியும் என்றென்றும் எம் மீது நிறைந்திருக்கக் கோருகிறோம்.

மங்களமான இப் புதிய வருஷத்தில் எல்லோருக்கும் நலமுண்டாகப் பிரார்த்திக்கிறோம்.

6-12-45 முதல் பிரதி தினமும் "ஸ்ரீ ஐயப்பன்" நாடகம் நடைபெற்று வருகிறது.

தங்களன்பன்,

நவாப் T. S. ராஜமாணிக்கம்





(சென்ற வாரத் தொடர்ச்சி)

சொக்கி மேலும் சொன்னாள்: " 'சாமி! நான் செஞ்சதெல்லாம் தப்பு. இந்த ஒரு விசை மன்னிச்சுக்கங்க'ன்னு எம் புருசன் பண்ணாடிக்கு முன்னாலே நெடுசாக்கையா விழுந்தாச்சு. 'இந்த வேஷமெல்லாம் எங்கிட்டே நடக்காது. என் முகத்திலேயே முழிக்காதே. ஓடிப்போ'ன்னு சொல்லிட்டு வேகமா வந்துட்டாங்க பண்ணாடி. எம் புருசன் வாப்பிலே போய் சிணுக்கிட்டு வயலைப் பாத்தாச்சு. அது கண்ணிலே தண்ணி கலங்கிருச்சு. நான் போய் அது பக்கத்திலே நின்னேன். 'இந்தா சொக்கி, இதெல்லாம் உன்னாலேதானே வந்தாச்சு. பத்து வருசமா புள்ளே போல வளந்து வந்த என் பண்ணாடிக்கி இன்னைக்கி ஒரு நிமிஷத்திலே துரோகம் செஞ்சிட்டேன். அவருக்குக் கோவமே வராது. வந்துட்டா அதை மாத்த யாராலேயும் முடியாது' அப்படின்னு எம்மேலே வருத்தப் பட்டுச்சு. 'நான் என்ன செஞ்சேன்? நீ கவனமில்லாமே இருந்ததுக்கு நானா பொனே?'ன்னு கேட்டேன். 'நீ கஞ்சியைக் கொண்டாந்து குடுத்ததும் பேசாமே வீட்டுக்குப் போயிருந்தா இவ்வளவு வருமா? மரத்தடியிலே வந்து உக்காந்து பேசவும் தானே நானும் அப்படியே இருந்துட்டேன்'னு திரும்பவும் என் மேலேயே குத்தமா சொல்லுச்சு. அதுக்கு நான் சொன்னேன். 'இன்னைக்குத்தானா மரத்தடிக்குப் போயி உக்காந்தோம்? தெனமும்தான் பேசிக்கிட்டிருக்கோம். என்னமோ நம்ம பொல்லாத வேளை, இன்னைக்கி இப்படி வந்து விடிஞ்சது'ன்னு சமாதானம் சொன்னேன். 'இந்தா சொக்கி, நல்ல வேளையோ பொல்லா வேளையோ, நம்ம பண்ணாடி மனசு மாறி என்னை வேலைக்கி வைச்சுக்கிற வரைக்கும் நானும் உன்கூடப் பேசப் போறதில்லே......' அப்படின்னுச்சு. இதைக் கேட்டதும் எம் மனசு திகீருன்னுச்சு. 'என்ன மச்சான், வெளையாட்டுக்குச் சொல்றியா, இல்லே நெசமாவே சொல்றியா?'ன்னு அது முகத்தை அண்ணாந்து பாத்துக் கேட்டேன். 'வெளையாட்டினாலே வந்த வெனைதானே இது! இன்னமா உன்கிட்டே வெளையாடணும்? அதையெல்லாம் கட்டி வைச்சிரு. பேசாமக் கஞ்சிக் கலயத்தை எடுத்துக் கிட்டு வீடு போய்ச் சேரு. நான் வயலை ஒரு ஒழுங்கு செஞ்சுட்டு இப்படியே பண்ணாடி வீட்டுக்குப் போயி அவங்களைக் கண்டு மறுபடியும் மன்னிப்புக் கேட்டுட்டு வாரே'ன்னு சொல்



துச்சு. நானும் அதுக்கு மேல் அங்கேயிருந்து பேசிக்கிட்டிருக்க மனசில்லாமே சோர்ந்து போயி வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்”

“இதெல்லாம் எப்ப நடந்துச்சு! எனக்குக் கொஞ்சங்கூட நினைவு இல்லையே” என்றேன்.

“அப்ப நீங்க சின்னப் புள்ளையா இருந்திருப்பீங்க. பள்ளிக் கூடத்துக்குப் போயிட்டு வர்றதும், பாடம் படிக்கிறதும், அதுலேயே கவனமா இருந்திருப்பீங்க. இந்த விசயமெல்லாம் உங்கக் காதுக்கு வந்திருக்காது.”

“சரி, சொக்கன் வந்து எங்கப்பா கிட்டே மன்னிப்புக் கேட்டதுக்கு எங்கப்பா என்ன சொன்னாங்க? மன்னிக்கவே முடியாதுன்னு சொல்லி யிருப்பாங்க. என்டி, அப்படித் தானே?”

“அப்படிச் சொல்லியிருந்தாலும் தேவலையே அம்மா! ‘என் மொகத்திலேயே முழிக்காதேடா. நாளைக்கிக் காத்தாலே வந்து உன் கணக்கைப் பார்த்துச் சம்பளத்தை யெல்லாம் வாங்கிக்கிட்டு, வேறே யாருகிட்டேயும் போய் வேலைக்கி அமந்துக்க. இனிமே இந்த வாசப்படி வந்து மிதிக்காதேடா’ன்னு சொல்லிட்டாங்களாம். என்னென்னமோ கேட்டுக் கெஞ்சிக் கூத்தாடிப் பாத்திருக்கு எம் புருசன். ‘முடியவே முடியாது’ன்னு மொகத்தை முறிச்சுச் சொல்லிட்டாங்களாம். வேறே ஒன்னும் செய்ய முடியாமே, முகத்திலே ஈ ஆடாமே வீட்டுக்கு வந்து திண்ணையிலே முழங்காலைக் கட்டிக்கிட்டு உக்காந்துச்சு. நான் போய் ‘என்ன, பண்ணாடி என்ன சொன்னாங்க?’ன்னு ஆசையாக் கேட்டேன். பதிலே பேசலே. நானும் ரொம்ப நேரம் பக்கத்திலே உக்காந்திருந்தேன். உக்காந்து, உக்காந்து என் இடுப்புக் கடுத்துப் போச்சு. ‘சரி, உள்ளே வந்து கஞ்சியாவது குடி’ன்னு கூப்பிட்டேன். ஒரு பேச்சுப் பேசாமே வந்து கஞ்சியைக் குடிச்சிட்டு மறுபடியும் திண்ணையிலே வந்து உக்காந்திருச்சு. நானும் அவசர அவசரமா ரெண்டு வாயி கஞ்சியை வாயிலே ஊத்திக்கிட்டு எம் புருசன் பக்கத்திலே வந்து உக்காந்துக்கிட்டு மறுபடியும், பண்ணாடி என்ன சொன்னாங்க?’ன்னு கேட்டேன். உடம்பை என் ரெண்டு கையாலேயும் புடிச்சுக் குலுக்கிக்கூடக் கேட்டேன். ஊம், ஊஹூம். எவ்வளவு நேரம் அப்படி உக்காந்திருந்துச்சோ எனக்குத் தெரியாது. எனக்குத் தூக்கம் வந்தாலும் அது பக்கத்திலேயே திண்ணையிலே படுத்துட்டேன். தூக்கம் கலைஞ்சு பாக்கும்போது நல்லா பல பலன்னு விடிஞ்சிருந்தது. எம் புருசனைக் காணோம்!”

“என்டி சொக்கி, அவன் தான் ஒன்னும் சொல்லலேன்னு சொல்றியே, அப்படின்னு எங்கப்பா சொன்னதை யெல்லாம் உன் கிட்டே யாரு சொன்னது?” என்று நான் குறுக்கே கேட்டேன்.

“கேளுங்க, எனக்கு ஒரு ரோசனை வந்து நேரே இங்கே உங்க வீட்டுக்கு ஓடியாந்து விடியக் காலமே உங்கம்மாளைக் கண்டு கேட்டேன். அவுங்க தான் சொன்னாங்க, முந்தின நா ராவு நடந்ததை யெல்லாம். உங்கம்மாகூடப் பண்ணாடிகிட்டே எம் புருசனுக்காக எவ்வளவோ சொல்லிப் பாத்தாங்களாம். ஆனா, பண்ணாடி கேக்கவே இல்லியாம். நான் இங்கே வந்த சமயம் பண்ணாடி வீட்டிலே இல்லே. ஆனா எம் புருசனுக்குப் பதிலா வேறே ஒரு ஆளை வேலைக்கி வைச்





கிட்டதாக உக்கம்மா சொன்னாங்க. எனக்குத் தலை சுத்துச்சு. என் மொகத்தைப் பாத்த உக்கம்மா, 'இதுக்கு ஏண்டி இப்படி ஆத்திரப்படறே? வேறே ஆளை வைச்சா என்ன மோசம் போச்சு? சொக்கன் இன்னைக்கி சேத்து வந்தவனில்லே. பத்து வருசமா படுகிடையா இங்கே இருக்கிறான். அவனைத் திடீர்னு நாங்க வெரட்டிருவோமா? என்னமோ கோபத்திலே உங்க பண்ணாடி செஞ்சிட்டாங்க இன்னம் கொஞ்ச நாள் போனால், கோபம் தணிஞ்சு அவுங்களே அவனைக் கூப்பிட்டு விடுவாங்க!' அப்படின்னு சமாதானம் சொல்லி என்னை அனுப்பிட்டாங்க. வீட்டுக்கு வந்தேன். அப்பவும் எம் புருசன் வரலே. சரி, பழய கஞ்சியை எடுத்துக்கிட்டு வயக்காட்டுப் பக்கம் போய்ப் பாக்கலாம். அங்கேதானே பண்ணாடியும் போயிருப்பாங்க, இதுவும் அங்கேதானிருக்கும்னு நெனைச்சு கஞ்சிக் கலயத்தைத் தலையிலே வைச்சுக்கிட்டு வேக வேகமாப் போனேன். தூரத்திலே யிருந்தே பாத்துட்டேன். எம் புருசன் வயலுப் பக்கமா ஒடற வாய்க்காலுக் குள்ளே இறங்கி வாய்க்காலை வெட்டித் தண்ணியை வயலுக்குள்ளே திருப்பிவிட்டுக் கிட்டிருந்துச்சு. நான் அதும் பக்கத்திலே போற வரைக்கும் நான் வந்ததே அதுக்குத் தெரியலே பக்கத்திலே போய் நின்னுக் கிட்டு 'மச்சான்!' அப்படின்னேன். குனிஞ்சு வாய்க்காலை வெட்டிக் கிட்டிருந்தது சட்டுன்னு நிமிந்து பாத்ததும் நான் பயந்தே போயிட்டேன். மொவத்திலே அவ்வளவு கோவம் இருந்துச்சு. 'இங்கே நிக்காதே, போயிரு'ன்னு கையினலே ஜாடை செஞ்சுச்சு. வாய் திறந்து பேசலே. 'நானு என்ன மச்சான் செஞ்சேன்? சரி, என் கிட்டேப் பேசாட்டிப் போகுது. காத்தாலே வெறும் வவுத்தோடே வந்திருக்கியே, இந்தா இந்தப் பழய கஞ்சியைக் குடிச்சிட்டாவது வேலையைப் பாரு!' அப்படின்னேன். கொஞ்ச நேரம் நின்னு யோசிச்சிட்டு அப்பிடியே வாய்க்காக் கரையோரமா இருந்த மண்ணை எடுத்துப் பல்லைக் கரகரன்னு ரெண்டு தேய்ப்புத் தேய்ச்சிட்டு, மட மடன்னு வாயைக் கொப்புளிச்சிட்டு, அந்த வேகத்திலேயே, வாய்க்காலுக்குள்ளே நின்னபடியே, கஞ்சிக் கலயத்தை என்கிட்டேயிருந்து வெடுக்கின்னு புடுங்கி, கடகடன்னு குடிச்சுட்டு 'போ போ'ன்னு கையை ஆட்டுச்சு. 'மத்தியானம் கஞ்சி காச்சிக் கொண்டாரவா?'ன்னு கேட்டேன். 'வேண்டாம்'னு கையை ஆட்டிருச்சு. நான் கொஞ்ச நேரம் நின்னேன். என்னைத் திரும்பிக்கூடப் பாக்காமே அது பாட்டுக்கு வாய்க்காலை வெட்டிக் கிட்டிருந்துச்சு. அப்ப ஒரு ஆளு தோளிலே மம்பட்டியைப் போட்டுக் கிட்டு அங்கே வந்தான். வந்தவன் எம் புருசன் கிட்டே வந்து 'பெரிய வீட்டு மணியகாரரு வயலுக இதுதானு?'ன்னு கேட்டான்.

'ஆமப்பா, இதுகதான். நீ யாரு?'ன்னு எம் புருசன் கேட்டுச்சு. 'நான்தான் அவுரு பண்ணையிலே புதுசா சேத்துச் சேந்த ஆளு. வயலுக்குத் தண்ணி பாச்சச் சொல்லி பண்ணக்காரருதான் அனுப்பினாரு. அவரும் இப்ப வாரேன்னு சொன்னாரு' என்றான். எனக்குத் திகீர்னுச்சு. 'சரி, நீ பாட்டுக்குப் போயி, அந்த மரத்தடியிலே உக்காரு. எல்லாம் நான் பாத்துக் கிறேன்'னுச்சு எம் புருசன்.

'ஓஹோ! நீதான் சொக்கன்னு சொல்ற ஆளா?' அப்படின்னு அவன் சிரிச்சுகிட்டே ஏளனமாக் கேட்டான். எம் புருசன் இடுப்பிலே ரெண்டு கையையும் வைச்சுக்கிட்டு அவனைக் கோவமா ஒரு பார்வை பாத்துச்சு. 'இல்லே, கோவிச்சுக்காதேப்பா. பண்ணைக்காரரு உன்னைப் பத்திச் சொன்னாரு. நான் வேலை செஞ்சுக் கிட்டிருக்கும்போது நீ வந்து எதுனாச்சும் கேப்பேன்னும், அப்படிக் கேட்டா ஒண்ணும் அதிகமாப் பேச்சு வைச்சுக்காமே, என் வேலையைக் கவனிக்கும்படியும் சொன்னாரு. அதனாலே தான் கேட்டேன்' என்றான் அந்த ஆள்.

"'அவுங்களே சொல்லி யனுப்பினாங்களா? சரி, அவுங்க சொன்ன மாதிரியே

எங்கிட்டே ஒண்ணும் அதிகமாப் பேச்சு வைச்சுக்காதே. வயலுக்குத் தண்ணி பாச்ச எனக்குத் தெரியும். நீ பேசாமப் போயி உக்காந்திரு!'ன்னு மறுபடியும் எம் புருசன் அவன் கிட்டே சொல்லுச்சு.

" 'பண்ணாடி வந்து என்னைத்தானே கோவிச்சுக்குவாங்க? அதனாலே......' அப்படின்னு அவன் நீட்டினான். அவங்க ரெண்டு பேருக்குள்ளேயும் வாக்கு வாதம் முத்தி விடும்போலே தெரிஞ்சு நான் பயந்து போயி நின்னுக்கிட்டிருந்தேன்.

" 'இந்தாப்பா, நீ புது ஆளு. நான் இந்த வயலுகளைப் பத்து வருசமா புள்ளையைப் போலப் பாத்துக்கிட்டு வாரேன். ராத்திரியிலேயும், மத்தியிலேயும், சாமத்திலேயும், பல்லின்னும், பாம்புன்னும் பாக்காமே பேய் மாதிரி காத்துக்கிட்டிருக்கேன். இன்னைக்கி ஒரு புது ஆளு வந்து, எங் கண்ணு முன்னாலே வேலையைச் செஞ்சா, எம் மனசு கேக்குமா? நீயே சொல்லு'ன்னு கோவத்தைத் தணிச்சுக் கிட்டு மெதுவாச் சொல்லுச்சு எம் புருசன்.

" 'அதெல்லாம் என் கிட்டே சொல்லி என்ன செய்யறது? பண்ணாடிதான் உன்னை வயலுக்குள்ளேயே கால் எடுத்து வைக்கக் கூடாதுன்னு வெரட்டி விட்டாராமே......'

" 'இங்கே பாரு. அவரு வெரட்டுவாரு; அடிப்பாரு; உதைப்பாரு; நான் திரும்பி வருவேன். அவரு என் தவப்பன் மாதிரி. அதையெல்லாம் நீ, இன்னைக்கி வந்தவன், குத்திக் காட்டிப் பேசாதே! என் உசிரு உள்ளவரைக்கும் இந்த வயலுக்குள்ளே இன்னொரு பயல் கால் எடுத்து வைச்சிருவானா?'

" 'அடடே வைச்சா, என்ன செய்வியாம்?'ன்னு கழுத்தைத் தூக்கிக் கிட்டு கேட்டான் அவன். எம் புருசனுக்கு உடம்பு துடிச்சது. அதையும் அடக்கிக்கிருச்சு. கோவம் இல்லாமலேயே சொல்லுச்சு மறுபடியும்:

" 'ஏது, நீ வந்ததும் வாராதுக்குள்ளே வம்புக்கு ஆரம்பிக்கிறாப்பிலே இருக்கே'ன்னு.

" 'அதுக்குத்தானே என்னை அனுப்பி யிருக்காரு பண்ணாடி! நான் யாரு தெரியுமா? மேட்டூர் மாரியப்பன்னு கேள்விப்பட்டிருக்கியா? அவன்தான் நான்! இந்தமாதிரி வம்பெல்லாம் எனக்குப் பெரிசில்லே மொதலாளிமாருக என்ன சொல்றாககளோ, அதைச் செய்யறதுக்குத் தடையா எவன் வந்தாலும் ஒரு கை பார்த்துத்தான் விடுவேன்......'னான் அந்த ஆளு.

" 'அடடே, இந்தாடாப்பா, உன் வீரத்தை யெல்லாம் அடுக்காதே! சரி, தைரிய மிருந்தா, பண்ணாடி சொன்ன மாதிரி நீ வயலுக்குள்ளே இறங்கிப் பாரு!'

" 'இறங்கினா என்ன செய்வேன்னுதான் கேக்கிறேன்?'

" 'அதை ஏன் கேக்கிறே? இறங்கிப் பாரேன்!'—இப்படி எம் புருசன் சொன்னதும், வந்த ஆளு தோளிலே இருந்த மம்பட்டியை வரப்பலே வைச்சிட்டு, துண்டுத் துணியை வரிஞ்சு கட்டிக்கிட்டு, மம்பட்டியைக் கையிலே எடுத்துக்கிட்டு வயலுக்குள்ளே இறங்கி, வரப்பை வெட்டுறதுக்கு மம்பட்டியை ஓங்கினான். எம் புருசன் அவன் ஓங்கின கையை அப்படியே புடிச்சு நிறுத்தி, 'டே, கடைசியாச் சொல்றேன். மரியாதையா வெளியே போயிரு. இல்லாட்டி நான் ரொம்பப் பொல்லாதவனா யிருப்பேன்' அப்படின்னுச்சு.

" 'அட போடா, உன்னையும் பாத்திருக்கேன், உங்க தாத்தாவையும் பாத்திருக்கேன். உனக்குத் தெரிஞ்சதைச் செய்யிடா'ன்னு சொல்லிட்டுக் கையைத் திமிறிட்டு மறுபடியும் வரப்பை வெட்ட ஆரம்பிச்சான். எம் புருசனுக்குத் தாக்கலே கோவம். குபீர்னு குனிஞ்சு அவன் காலை வாரி



விட்டிருச்சு. சதக்குன்னு வாய்க்கால் தண்ணியிலே தலைகுப்புற விழுந்திட்டான். விழுந்தவன், எந்திருக்கு முன்னே, ரெண்டு கையாலேயும் அந்தாசமாத் தூக்கி, பீனை எறியற மாதிரி ஆத்தங் கரைப்பக்கம் தூக்கி எறிஞ்சிருச்சு!"

"யாருடி சொக்கி, உன் புருஷனா? சொக்கன் அவ்வளவு கெட்டிக்காரனா? ரொம்ப வேடிக்கையா யிருக்கே! வீரம் பேசிக்கிட்டு வந்தவனை மண்ணைக் கவ்வினான்?" என்று சொல்லி நான் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தேன்.

"எனக்கும் கூட அப்ப இப்படித்தானம்மா சிரிப்பு வந்துச்சு. நான் சிரிச்சதைப் பார்த்ததும் அந்தப் புது ஆளுக்கு ரோசம் காயிக்கு வந்தமாதிரி வந்துருச்சு கரையிலே தூக்கிப் போட்டதிலே நல்லா அடியும் பட்டிருச்சு. எந்திருச்சு ஓடியாந்தான் எம் புருசனை அடிக்க. அதுக்குள்ளே இதுவும் கரைக்கு வந்திருச்சு. ரெண்டு பேரும் கட்டிப் பிரண்டாங்க ஆத்தங்கரை இறக்கத்திலே"



"அந்தச் சமயத்திலே நீ பேசாமே பாத்துக்கிட்டா இருந்தே?" என்று அவளை இடைமறித்துக் கேட்டேன்.

"நான் என்னம்மா செய்ய முடியும்? ரெண்டு பேரும் ஆம்பிளைக. 'ஐயோ வேண்டாம், விட்டிருங்க. நம்ம பண்ணடி கிட்டே போயிப் பேசிக்கலாம்' அப்படின்னு எவ்வளவோ சொல்லித் தடுத்துப் பாத்தேன். என் பேச்சு என் புருசன் காதிலே விழுந்தாத்தானே!"

"சரி, சீக்கிரம் சொல்லு. கடைசியிலே யாரு ஜெயிச்சது?" என்று ஆவலாகக் கேட்டேன்.

"அந்தப் பாவிப் பயல் பொல்லாதவன் போலிருக்கு! எந்த இடத்திலே மனுஷனை அடிச்சா உசிரு போகும் என்கிறதை நல்லாத் தெரிஞ்சவன் போலிருக்கு. ஓங்கி ஒரு உதை உதைச்சான் உசிர்நிலையிலே! 'ஐயோ, கொன்னுட்டானே'ன்னு சொல்லிக்கிட்டு மயங்கி மடார்னு விழுந்துருச்சு எம் புருசன். அதோடே விட்டானா? அந்தக் கொலைகாரப் பயல்? பெரிய வீரன் மாதிரி, 'எங்கிட்டேயாடா உன் கைவரிசையைக் காட்டுறே?'ன்னு சொல்லிக்கிட்டே ஓடிப் போயி மம்பட்டியை எடுத்திட்டு வந்து ஓங்கி மண்டையிலே ஒரு போடு போட்டுட்டான். நான் ஓடிப்போயி அவனைத் தடுக்கிறதுக் குள்ளே. மயங்கிக் கிடந்த எம் புருசன் தலையிலே யிருந்து ரத்தம் தரையிலே வடிஞ்சு ஓடிச்சு."

"ஐயோ, அப்புறம் என்னடி ஆச்சு?" என்று ஆத்திரமாகக் கேட்டேன். அந்த ஜாமத்தில் அதைக் கேட்கவும் எனக்கு மனசிலே பயம் எடுக்க ஆரம்பித்து விட்டது. என் குரலின் நடுக்கத்தி லிருந்தே அதைத் தெரிந்து கொண்ட சொக்கி, "என்னம்மா, அஞ்சு வருசத்துக்கு முந்தி நடந்ததைச் சொல்லும் போதே இப்பிடிப் பயப்படுறீங்களே! நேரிலே இருந்து பாத்த எனக்கு அப்ப எப்படி இருந்திருக்கும்?" என்றாள்.

"அடியே சொக்கி, உங்க சாதிக்குள்ளே சண்டையும், அடிதடியும் சகஜம். புருஷன் பெண்டாட்டிக்குள்ளே நடக்கிற சண்டையிலேகூட நீங்க ளெல்லாம் இப்படித்தானே அடிச்சுக்கிட்டுச் சாகுறீங்க?" என்றேன்.

"நீங்க சொல்றது நிஜந்தான். அதுக்குக் காரணம் என்னன்னு தெரியுமா? எங்க ஜாதியிலே அநேகமா எல்லாரும் குடிப்பாங்க. ஆனால் எம் புருசனுக்கு அந்தப் பழக்கமே இல்லே. எங்க ரெண்டு பேருக்கும் சண்டை என்னாலே பயம். சண்டை நடக்கிற பக்கத்திலே எம் புருசன் நிக்கவே நிக்காது. எங்க சேரிக்குள்ளேயே எங்க ரெண்டு பேரையும் பாத்து பக்கத்து வீட்டுக் காரங்க எல்லாம் ஆச்சரியப் படுவாங்க. அன்னைக்கு என்னமோ எங்க கெட்ட காலம் அப்படி வந்துச்சு."

"சரி, மயங்கி விழுந்த உன் புருஷனை நீ என்ன பண்ணினே?" என்று நடந்ததை மேலே சொல்லும்படி கேட்டேன்.

"பக்கத்து வாய்க்காலுக்கு ஓடிப்போய் மூந்தானையை நனைச்சு, தண்ணியை மொகத்திலே புளிஞ்சு பாத்தேன். மண்டையிலே யிருந்து வடிஞ்ச ரத்தத்தைக் கையாலே அழுத்திப் பாத்தேன். ரத்தம் நிக்கவே

இல்லே. அந்தப் புது ஆளு மெதுவா நழுவிப் போயிட்டான். அந்தச் சமயத்திலே உங்க அப்பாரும், புது ஆளு வயல்லே எப்படி வேலே செய்யிறான்னு பாக்க வந்தாரு. தூரத்திலே வரும்போதே என்னைக் கண்டுட்டு, நான் வாய்க்காலுக்கும், மோட்டுக்குமா ஓடிச்சுக்கிட்டு நடிக்கிட்டிருக்கிறதைப் பாத்து, அவுங்களும் வேகமா வந்தாங்க. எம் புருசன் மயக்கமாக் கிடக்கிறதையும் தரையிலே ரெத்தம் வடிஞ்சிருக்கிறதையும் பாத்துட்டு அவுங்களே பயந்து போயிட்டாங்க. 'சொக்கி, இது என்ன? என்ன நடந்துச்சு?'ன்னு பதட்டமாக் கேட்டாங்க. அவுங்களேப் பாத்ததும் எனக்கு வருத்தம் சொல்ல முடியலே. வாய் திறந்து பேசவே நாக்கு வரலே. 'சாமி, நீங்கதான் எனக்கு மங்கிலியப் பிச்சை குடுக்கணும்'னு அவுங்க கால்லே விழுந்தேன். 'சரி, எழுந்திரு. என்ன நடந்துச்சு? சொல்லு'ன்னு கேட்டாங்க. நானும் எந்திருச்சு கண்ணைத் தொடைச்சுக்கிட்டு நடந்ததை யெல்லாம் ஒண்ணு விடாமே சொன்னேன். அவுங்க ஒரு பெருமூச்சு விட்டுட்டு, 'உம். இதுக்கெல்லாம் நான்தானே காரணம்? ஐயோ, பாவம்! கல்யாணம் பண்ணி ஒரு மாசத்துக்குள்ளே உனக்கு இந்தக் கதியா!' அப்படின்னு வருத்தப் பட்டாங்க. அவுங்க அப்படிச் சொன்னதும் எனக்கு ரொம்பச் சந்தேகமாய்ப் போச்சு. 'என் சாமி, எம் புருசன் பொழைக்கிறாரா?'ன்னு அழுதுக்கிட்டே கேட்டேன். 'பயப்படாதே. இப்பவே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கிட்டுப் போய்ப் பாக்கலாம். வேறே ஒண்ணுமில்லே. மயக்கம்தான் போட்டிருக்கு. மூச்சு லேசா வந்துக்கிட்டிருக்கு'ன்னு சொல்லிட்டு ரோட்டுப் பக்கமா வேகமா வந்து, சாலேயிலே போய்க்கிட்டிருந்த ஒரு வண்டியை நிறுத்தி, அதிலே யிருந்த ரெண்டு ஆளேயும் கூட்டியாந்து எம் புருசனேத் தூக்கிக்கிட்டு வந்து வண்டியிலே போட்டு ஆசுபத்திரிக்குக் கொண்டாந்தாங்க. நானும் வண்டி பின்னலே அழுதுக்கிட்டே வந்தேன்.



“ஆசுபத்திரியிலே டாக்டரய்யா பாத்துட்டு ரொம்பப் பலமாத்தான் அடி பட்டிருக்கு. இங்கேயே ஒரு நாலு நாள் இருந்தாத்தான் சௌக்கிய மாகும்னு சொல்லிட்டாரு. 'சரி என்ன செய்யணுமோ செய்யுங்க. பணத்துக்கு யோசனை பண்ணுறீங்க. எல்லாச் செலவும் நான் தர்றேன்'னு பண்ணாடி சொன்னுங்க. டாக்டரய்யாவும் சம்மதிச்சுக்கிட்டாரு. படுக்கைப் பக்கத்திலே ஒரு ஆளு ராத்திரியிலே கட்டாயமா இருக்கணும்னு டாக்டரய்யா சொன்னதினுலே நானே கட்டிலுக்குப் பக்கத்திலே உக்காந்திருந்தேன். தலையிலே மருந்து போட்டுப் பெரிய கட்டுப் போட்டிருந்தாங்க. மத்த இடங்களிலேயும் மருந்து போட்டிருந்தாங்க. வாயிலே ரப்பர் குழாய் வைச்சு பாலே ஊத்தினுங்க. நடுச் சாமம் இருக்கும். அப்பத்தான் மெதுவாக் கண்ணைத் திறந்து நாலா பக்கமும் பாத்துட்டு, 'நான் எங்கேயிருக்கேன்?' அப்படின்னு கிணத்துக்குள்ளே யிருந்து பேசறமாதிரி கேட்டுச்சு எம் புருசன்.

'மச்சான், இங்கே பாரு. காத்தாலே வயல்லே சண்டை நடந்தது தெரியல்லியா? நான்தான் சொக்கி!' என்று நடந்ததை யெல்லாம் சொன்னேன்.

“அது கொஞ்ச நேரம் மொன, மொன மேலேயும் கீழேயும் பாத்துட்டு 'ஆசுபத்திரியா இது? பண்ணாடியே வந்திட்டுப் போனுங்களா? சரி, நீ ஏன் இன்னம் இங்கே இருக்கிறே? பண்ணாடி பாத்தா இன்னம் கோபம் வராவா? போ, எந்திரிச்சு வீட்டுக்குப் போ. பண்ணாடி வீட்டிலே எனக்கு மறுபடியும் வேலே கிடைக்கிற வரைக்கும் நீ என்னே வந்து பாக்காதே. என்கூடப் பேசவும் வேண்டாம். போ' அப்படின்னு வெரட்டுச்சு.

“'உனக்குச் சௌக்கியமாகிற வரைக்கும் பண்ணாடியேதான் உன்கிட்டே இருக்கும்படியாச் சொல்லிட்டுப் போயிருக்காங்க. இந்தச் சாமத்திலே நான் எப்படி வீட்டுக்குப் போகமுடியும்? இன்னம் ரெண்டு மூணு நாளு நாளும் இங்கேயே இருக்கணும்னு டாக்டரும் சொல்லி யிருக்காங்க......'

“'சரி, சரி. இங்கேயும் என்னைத் தொந்தரவு பண்ண வந்து தொலைஞ்சிட்டியா? உன் மொகத்திலேயே முழிக்க மாட்டேன்' அப்படின்னு சொல்லிட்டு வேறே பக்கம்



திரும்பிப் படுத்திருச்சு. நான் பேசாமே அழுதுக்கிட்டே விடிய விடிய உக்காந்திருந்தேன். இந்த மாதிரியே எத்தினி நாளைக்கு இருக்கிறதுன்னு கவலைப்பட்டிருக்கிறப்ப, உங்க அப்பாவும் அம்மாவும், விடிஞ்சு கொஞ்ச நேரத்துக் கெல்லாம் அங்கே வந்தாங்க" என்று சொல்லி நிறுத்தினாள் சொக்கி.

"என்ன, எங்கம்மா கூட வந்தாங்களா? எங்கப்பாவும் அம்மாவும் வந்து என்ன கேட்டாங்க?" என்றேன்.

சொக்கி தொடர்ந்து சொன்னாள்:

"பண்ணாடி வந்த சத்தத்தைக் கேட்டதும் எம்புருசன் வாரிச் சுருட்டி எந்திரிக்கப் பாத்துச்சு. ஆனால் உடம்பெல்லாம் ஒரே வலியா இருந்ததினாலே எழுந்திரிக்க முடியலே. 'சொக்கா, எந்திரிக்காதே, உடம்பை அலட்டிக்காதே. டாக்டர் என்னமோ சொல்லுவாரு. பரவாயில்லே, சும்மாப் படுத்திரு. இப்ப எப்படி இருக்கு உடம்பு'ன்னு கேட்டாங்க பண்ணாடி. 'இது என்னங்க ஒரு பெரிசு? இரண்டு நாளிலே சரியாப் போயிரும். ஆனால் எனக்கு இப்ப மனசை வாட்டறது இது இல்லீங்க. அந்த விசயத்தை நீங்கதான் தணிக்கணும்' அப்படின்னு ரொம்ப வருத்தத்தோடே சொல்லுச்சு எம் புருசன். 'உம். அதெல்லாம் எனக்குத் தெரியுண்டா, தெரியும். அதைப் பத்தி பின்னாலே பாத்துக்கலாம். மொதல்லே நீ சௌக்யமாகி எழுந்திரு'ன்னு சிரிச்சுக்கிட்டே பண்ணாடி சொன்னாங்க. எம் புருசனுக்கு அந்தச் சமாதானம் பிடிக்கலே. 'சாமி, இங்கே எத்தினி நாள் இருந்தாலும் எம் மனசு சந்தோசமா இருக்காது. ஒரு சொல்லு நீங்க சொன்னாப் போதும். இன்னைக்கே, இந்தத் தலைக்கட்டோடேயே வயலுக்குப் போயி வேலை செய்ய எனக்குத் தெம்பு வந்திருக்கு'ன்னு சொல்லுச்சு.

"'என்ன, இங்கே எத்தினி நாள் இருந்தாலும் நீ சௌக்ய மடைய மாட்டியா? டாக்டரய்யாதான் ரொம்பக் கவனமாக் கவனிக்கிறாரே? சொக்கியும் உன் பக்கத்திலேயேதானே இருக்கிறா? இன்னம் என்ன குறைச்சல் உனக்கு?' அப்படின்னு கேட்டாங்க பண்ணாடி.

"'சாமி, சொக்கி என் பக்கத்திலே இருக்கிறதே எனக்குப் பிடிக்கலே. அவளைப் பாக்கும் போதெல்லாம் நீங்க அந்த அரச மரத்தடியிலே நின்னு என்னைக் கண்டிச்சது நெனைவுக்கு வருதுங்க. அவள் மொகத்தைப் பார்க்கவே என் வயிறு எரியுதுங்க. நீங்க ஒரு வார்த்தை சொன்னாப் போதும்!'னு மறுபடியும் சொன்னதையே திருப்பிச் சொல்லுச்சு.

"'என்னடா சொல்லச் சொல்றே?'ன்னாங்க பண்ணாடி.

"'என்னைத் திரும்பியும் உங்ககிட்டே வேலைக்கு வைச்சுக்கணும். அவ்வளவுதான், நான் கேக்கிறது!'

"'ஓஹோ, அதைச் சொல்றியா? நீ சௌக்யமாகி வா, பாத்துக்கலாம்'

"'நீங்க ஏன் இப்படி அவன் மனசை வாட்டுறீங்க? சரின்னு சொல்லுங்களேன்' அப்படின்னு உங்கம்மா சொன்னாங்க பண்ணாடியைப் பாத்து.

"இதுதான் சமயம்னு நானும் பண்ணாடியைக் கும்பிட்டு, 'பண்ணாடி! நான் இந்த ரெண்டு நாளிலேயும் படுற கஷ்டம் கடவுளுக்குத் தெரியும். இது எங்கிட்டேப் பேசமாட்டேங்கிது. இப்ப இந்த ரெண்டு நாளும் எனக்கு ரெண்டு வருசமா இருக்குது. நீங்க ஒரு சொல்லுச் சொன்னாப் போதும். எங்க மனசு மறுபடியும் ஒண்ணாயிடும்' அப்படின்னு சொன்னேன். எங்கண்ணிலேயிருந்து மளமளன்னு தண்ணி வந்திருச்சு. பண்ணாடி ஒண்ணும் சொல்லாமே கொஞ்ச நேரம் நின்னுக்கிட்டிருந்தாங்க. அப்ப, உங்கம்மா 'இதுக்கு என்ன யோசனை பண்றீங்க? அவனை மறுபடியும் வேலைக்கு எடுத்துக்கிறேன்னு ஒரு வார்த்தை சொல்லிடுங்களேன். பாவம், சின்னஞ் சிறுசுக மனசை நம்ம துன்பப் படுத்தக் கூடாது'ன்னு சொன்னாங்க.

"'ஓஹோ, சொக்கிக்குப் பரிஞ்சுக்கிட்டு நீ பேசறியாக்கும். சரி, இப்ப என்ன சொல்லச் சொல்றே? அவனை மறுபடியும்

வேலைக்கி எடுத்துக்கணும். அவ்வளவு தானே? அவன் சௌக்கியமாகி எழுந்திருக்கட்டும்'—பண்ணாடி அப்படிச் சொன்னது தான் தாமசம். உடனே எம் புருசன் படுக்கையிலே யிருந்து ஒரு துள்ளுத் துள்ளி எந்திருச்சு, பண்ணாடி காலிலே விழுந்து கும்பிட்டு, 'சாமி, என் வவுத்துலே கஞ்சியை வாத்தினீங்க. இந்த உடம்பு வலியும் தலைக்கட்டும் போன இடமே தெரியலே. நான் இப்பவே ஆசுபத்திரியை விட்டு வந்திடுறேனுங்க'ன்னு சொல்லுச்சு.

" 'சொக்கா, நீ இல்லாமே எனக்கு இந்த ரெண்டு நாளும் எப்படி இருந்துச்சு தெரியுமா? கையே ஒடிஞ்சமாதிரி போச்சு. கோபத்திலே என்னென்னமோ பேசிட்டேன். அதையெல்லாம் மனசிலே வைச்சுக்காதே. சொக்கியையும் நீ ரொம்பக் கஷ்டப் படுத்திட்டே. அவள் தான் உனக்கு உயிர் பிச்சை கொடுத்தவள். அவ மனசு நோக நடத்துக்காதே......' அப்படின்னு புத்திமதி சொன்னாங்க பண்ணாடி. அப்ப உங்கம்மா என்னைப் பாத்து, 'இங்கே பாத்திங்களா, சொக்கிக்கு எவ்வளவு சந்தோஷம்னு! சந்தோஷத்திலே அவ கண்ணிலே யிருந்து தண்ணி கலங்குது!'ன்னு சொன்னாங்க. பண்ணாடியும், எம் புருசனும் என்னைப் பாத்தாங்க. நான் வெக்கப்பட்டுத் தலையை குனிஞ்சுகிட்டேன்.

" 'சரி, வீட்டுக்குப் போய் வண்டி அனுப்புகிறேன். நீயும் சொக்கியும் உங்க வீட்டுக்குப் போங்க. தினமும் இங்கே வந்து கட்டுக் கட்டிக் கிட்டுப் போனாப் போதும். நாலு நாளிலே சௌக்யமாயிடும்னு டாக்டர் சொல்லி யிருக்காரு. இந்தப் பத்து ரூபாயை வைச்சுக்கிட்டு சொக்கனுக்கு நல்லா கறியும் சோறுமா ஆக்கிப் போடு. அவன் உடம்பிலே ரெத்தப் பசையே இல்லே'ன்னு சொல்லி என்கிட்டே பத்து ரூவா நோட்டைக் குடுத்தாங்க பண்ணாடி. நான் ரெண்டு கையும் ஏந்தி வாங்கிகிட்டு அவரைக் கும்பிட்டேன். அவங்க அப்புறம் போயிட்டாங்க" என்று சொக்கி முடித்தாள்.

"அப்பாடி, இப்பத் தாண்டி சொக்கி, என் மனதும் ஒரு மாதிரி இருக்கு. சொக்கன் பிழைத்ததே மறு பிழைப்புமாதிரிதானே" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டேன்.

"அம்மா, அது என் கூட சந்தோசமாப் பேசின அன்னைக்கி ராத்திரி என் மனசு அடைஞ்ச சந்தோசம் இருக்கே, அதைப் போல நான் என்னைக்கும் இருந்ததில்லே" என்று சொக்கி தன் உள்ளத்தில் இத்தனை நாள் அடக்கி வைத்திருந்ததை மனம் விட்டுச் சொன்னாள்.

"பாத்தியா, நான் சொன்னேனா இல்லையா? புருஷன் பெண்டாட்டி கொஞ்ச நாள் பிரிஞ்சிருந்து மறுபடியும் சேரும்போது ஒரு தனி இன்பம்தாண்டி இருக்குது" என்று என் மனதிலுள்ளதையும் சொல்லி விட்டேன்.

"அம்மா, உங்களுக்கும் அந்த மாதிரி நடக்கத்தான் போகுது. புது ஊரிலே வீடெல்லாம் பாத்ததுக்கப்புறம் உங்கய்யா வந்து உங்களைக் கூட்டிக்கிட்டுப் போவீங்க அங்கே இருக்கும்போது என்னைப் போலச் சந்தோஷப் படுவீங்க" என்று குறும்பாகச் சொன்னாள்.

"ஏனடி, நீ என்னைக் கேலி பண்ண ஆரம்பிச்சிட்டியே. அவங்க எப்ப வரப் போறாங்களோ நான் எத்தினி நாளைக்கு இங்கே இருக்கணுமோ?" என்று என் வருத்தத்தைத் தெரிவித்தேன்.

"எம்மா, அப்பிடிச் சொல்றீங்க? நாளைக்கே வந்தாலும் வந்திருவாங்க. யார் கண்டது?" என்றாள்.


அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது. சொக்கி கதவைத் திறந்துவிட்டாள். கையில் சிறு பெட்டியுடன் என் கணவர் நின்று கொண்டிருந்தார். "வாங்க, வாங்க, இப்ப ஏது வண்டி?" என்று சொல்லிக் கொண்டே கட்டிலிலிருந்து எழுந்து ஓடி அவர் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டேன்.


"ஐந்து மணி வண்டியில் வந்தேன்" என்றார் அவர்.

"என்ன விடிந்து போய்விட்டதா?" என்று ஆச்சரியமாய்க் கேட்டேன். சொக்கியும் வாசலில் போய் நின்று ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து, "ஆமம்மா. விடிஞ்சு போச்சு!" என்றாள்.

"சரிங்கம்மா, இனிமே எனக்கென்ன வேலை இங்கே? நான் வீட்டுக்குப் போயிட்டு வாரேன்" என்று புறப்பட்டுப் போனாள் சொக்கி.









கோர்ட் ஹாஸ்யம்

சுந்தர்

முதல் கட்சிக்காரன்!

நான் பி.எல். பாஸ் செய்தவுடன் என் பெயரைக் கொட்டை கொட்டையாக எழுதி ஒரு போர்டு என் வீட்டு வாசலில் தொங்க விட்டேன். பிரதி தினமும் காலையில் ஸ்நானம், பூஜை இவைகளை விடாமல் செய்து வந்தேன். இப்படிச் சில மாதங்கள் கழிந்தன.

ஒரு நாள் காலை எட்டு மணியிருக்கும். வாசல் பக்கம் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். என் மூளை வேலை செய்து கொண்டே இருந்தது. அச்சமயம் ஒரு வயதான முகம்மதியர் என் வீட்டு வாசல் படியில் ஏறினார். என் முகத்தை நன்ருகக் கவனித்துக் கொண்டு, தன் கையிலிருந்த ஒரு சிறிய மூட்டையைத் தடவிப் பார்த்துக் கொண்டார். அது ஒரு நம்பர்க் கட்டுபோல் தோன்றியது. நானும் ஆவலுடன் கவனித்தேன். படிகள் ஏறி என் சமீபம் வந்து சாயபு தன் மூக்குக் கண்ணாடியைத் தூக்கி விட்டுக்கொண்டு என்னை நன்ருய்க் கவனித்தார்.

"வாங்க சாயபு, உட்காருங்க!" என்று புன்சிரிப்புடன் சொன்னேன். அவர் எனக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெகு பிரியத்துடன் என் சமீபத்தில் வந்து உட்கார்ந்து என்னைப் பார்த்து, "தங்களைக் குழந்தைப் பருவத்தில் பார்த்தது. இப்போ வளந்துட்டீங்க. உங்க தகப்பனர் பெரிய ஐயாவை நன்ருய்த் தெரியும். ஜாதி வேருக இருந்தாலும் நாங்க ஒரு தாய் வயித்துப் பிள்ளைகள் போல் பழகினேம்" என்று சொல்லிக் கொண்டே மூட்டையை அவிழ்த்தார்.

மூட்டை நம்பர்க் கட்டுதான் என்பதும் எனக்குத் தெரிந்தது புது வக்கீலான எனக்கு உடனே உடம்பு அரை அங்குலம் பெருத்ததுபோல் ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. "சாயபு, உங்களுக்கு எந்த ஊர்? பார்த்த ஞாபகமாக இருக்கிறதே!" என்று சொல்லிவிட்டு, "காலை ஆகாரம் ஏதாவது ஆச்சா, தேவையா?" என்றேன். "வேண்டாம், வேண்டாம், வந்த காரியம் ஆச்சன்ன என் வயிறு ரொம்பிய தற்குச் சமானம்" என்று சொல்லிவிட்டு நம்பர்க் கட்டைப் பகிரங்கமாய் எடுத்து எனக்கு எதிரில் வைத்தார்.

நம்பர்க் கட்டு பெரியதாகவே இருந்தது. அதில் பல தஸ்தாவேஜிகளும், ரிஜிஸ்டர் ஆபீஸ் காபிகளும், முத்திரை ஸ்டாம்பு கடிதாசிகளும் அடுக்கி இருப்பதைப் பார்த்ததும் எனக்குச் சற்றுப் பயமாகவே இருந்தது. இருந்தாலும் "ஒரு ஸீனியர் வக்கீல் வைத்துக் கொண்டால் கவலை விட்டது" என்று நினைத்து எனக்குள் சமாதானம் செய்து கொண்டேன்.

இதற்குள் சாயபு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். "எனக்குக் கப்பல் கார சாயபு என்று பெயர். எனக்கு இரண்டு கப்பல் ஓடிச்சுங்க. லட்சக்கணக்கான பணம் தொழிலில் புரட்டினேன். பாருங்க, கொஞ்ச வருஷங்களுக்குள்ளே ஒரு நாள் ஒரு கப்பல் தீப்பிடித்து எரிந்து போச்சுங்க. ஏரான நஷ்டங்க. பிறகு வியாபாரத்தை நிறுத்தி விட்டேன். பிற்பாடு நிலுவைகளை வசூல் செய்ய ஆரம்பித்தேன்" என்றதும், நானும் என்னுடைய அனுதாபத்தைக் காட்டி "ஐயோ, பாவம்! நிலுவை எவ்வளவு ரூபாய் வெளியில் வசூலாகாமல் நின்று விட்டது?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"சும்மா, கொஞ்சங்க! சுமார் ஒரு லட்சம் ரூபாய் இருக்கும்" என்ருர் சாயபு.

"நீங்கள் கொடுக்க வேண்டியது ஒன்றுமில்லையா?"

"வியாபாரத்தில் எல்லாந்தான் இருக்கும். நான் கொடுக்க வேண்டியது சுமார் ரூ. 25,000 இருக்கும்" என்ருர்.

"வரவேண்டியதை வசூல் செய்தால் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விட்டு நீர் பாக்கியை வைத்துக்கொண்டு சௌக்கியமாயிருக்கலாமே" என்றேன்.

"ஆமாங்க, சாமி, ஆமாம். அதுக்குத்தானே நான் உங்களிடம் வந்தேன்?"

உடனே என் மனதிற்குள் "பளிச்" என்ற ஒரு மின்னல் ஏற்பட்டது. ஏராளமான கேசுகள் நடத்துவதாயும், நம்பர்க் கட்டுகள் மத்தியில் உட்கார்ந்து கொண்டு கட்டுகளைப் படிப்பதாயும், கோர்ட்டில் யாவரும் திகைக்கும்படி நான் 'ஆர்குமெண்டு' செய்வதாயும், ஒன்றன்பின் ஒன்ருக நம்பர்கள் ஜயித்து வருவதாயும், பீஸ் பணம் கணக்கில்லாமல் வருவது போலும், ஊரில் உள்ளவர்கள் என்னைப் பார்த்து ஆச்சரியப் படுவதாயும் மனக் கண்ணாடி மூலம் ஒரு க்ஷண நேரம் கனவு கண்டேன்.

சாயபு மேலே சொல்ல ஆரம்பித்தார்:

"ஐயா! உங்களிடம் உண்மையைச் சொல்றேங்க. கேளுங்க. எங்க ஊர் ஐயா இங்கே வக்கீலாக இருந்தாங்க. அவங்க பேர் உங்களுக்குத் தெரியாதுங்க. வி. ஆர். என்று பேருங்க. அவர் நல்ல புத்திசாலிங்க. என் கேசை நன்றாய்ப் புரிந்துகொண்டு அழகாகப் பேசுவாருங்க. பாருங்க, என் துரதிர்ஷ்டம் அவர் இறந்து போயிட்டாருங்க" என்றதும், எனக்குத் துக்கம் ஒரு பக்கமும் சந்தோஷம் ஒரு பக்கமும் உண்டாயிற்று. சாயபுவின் வக்கீல் இறந்து விட்டார் என்பதற்குத் துக்கமும், எனக்குச் சாயபுவின் நம்பர்கள் வந்ததில் சந்தோஷமும் ஒரே சமயத்தில் ஏற்பட்டன.

"அப்புறம் என்ன செய்தீர்கள்? வயது முதிர்ந்த காலத்தில் உமக்கு ரொம்ப சிரமம்" என்றேன்.

"அதை ஏன் சொல்றீங்க? கேளுங்க சாமி, சொல்றேன்!" என்று வெகு துக்கத்துடன் மேலே சொல்ல ஆரம்பித்தார் சாயபு.

"பிறகு, என் நம்பர்க் கட்டுகளை எடுத்துக்கொண்டு மற்றொரு பிரபல வக்கீலான ஸ்ரீமான் எம். டி. யிடம் போனேனுங்க. அவுங்க, பாருங்க! நல்ல திடகாத்திரம், முரட்டு சரீரம். வயதானாலும் கம்பீரமான பேச்சு. அவர் பேசினால் கோர்ட் கட கட வென்று ஆடுவதுபோல் தோன்றும். அப்பேர்ப்பட்டவர் என் நம்பர்களை ஏற்றுக் கொண்டு, இரண்டு ஈரங்கி வருவதற்குள் அந்தப் பாழாய்ப்போன 'டிங்கு' ஜுரம் கண்டு திடீரென்று இறந்தாருங்க. நான் என்ன செய்வதுங்க?" என்று சொல்லி முடித்ததும் சாயபுவின் கண்களில் ஜலம் கரைபுரண்டு வந்தது.

"அதற்கு என்ன செய்வது சாயபு? உமக்கும் அதிர்ஷ்டமில்லை. உமது நம்பர்களை ஜெயித்துக் கொடுத்து நல்ல பேர் வாங்க அந்த வக்கீல்களுக்கும் அதிர்ஷ்டமில்லை!" என்று சொல்லி "மேலே என்ன ஆச்சு?" என்றேன்.

உடனே சாயபு கொஞ்சம் திடப்படுத்திக்கொண்டு, "சாமி, நீங்க சிறு வயசுங்க! முதல் முதல்லே வக்கீல் வேலைக்கு வந்திருக்கிறீங்க. அந்த வயித்தெரிச்சலைச் சொல்ல நாக்கு வல்லீங்க. நம்ப ஐயா மகனுச்சென்று பாக்கறேனுங்க" என்றார்.

எனக்கும் மனதில் கொஞ்சம் தடுமாற்றம் உண்டாயிற்று. ஆயினும் நான் பயப்படுவது சாயபுவுக்குத் தெரியக்கூடாது என்று எண்ணி, "சும்மா சொல்லுங்க, நம்ப கையிலே என்ன இருக்கு? எல்லாம் மேலே இருக்கிறாரே அவர் செயல்!" என்று சொல்லி ஆகாசத்தைச் சுட்டிக் காட்டினேன்.

சாயபு உடனே என் சமீபம் நெருங்கி வந்து உட்கார்ந்து கொஞ்சம் அடங்கிய குரலில் சொல்ல ஆரம்பித்தார்:

"இந்த ஊர் கவர்ன்மெண்டு பிளீடர் மகன் எஸ். ஜி. தெரியுங்களா? பலே சூராளுங்க. சட்டத்தைக் கரைச்சுக் குடிச்சவங்க. என்ன பேச்சு, என்ன பார்வை, என்ன சாதுர்யம்! அடடா, நீங்க பாக்கலீங்க. போலிருக்கு!" என்றவுடனேயே என் மனது துடிக்க ஆரம்பித்து விட்டது.

"ஆமாம், அவருக்கு என்ன?" என்றேன்.

"அந்த வயத்தெரிச்சலை ஏன் கேக்கறீங்க, சாமி? கடவுளுக்குக் கண்ணே கிடையாதுங்க. நான் அவருக்கு வக்காலத்து போட்டு மூன்று நாள்கூட அவுங்க இல்லீங்க. திடீரென ஒரு மாரடைப்பு வந்து 'பொக்' என்று பிராணன் போயிட்டுதுங்க, அதை நினைச்சால் என் வயிறு பதறுதுங்க! அவங்களைப் பார்த்தால் எல்லாம் உங்களைப் போலவே இருப்பாங்க" என்றதும் நான் தாங்காமல் சட்டென்று எழுந்து, "ஆம், சாயபு! இப்பொழுது என்ன சொல்லப் போகிறீர்?" என்று படபடப்புடன் கேட்டேன்.

"சாமீ, எனக்கு வேறே கதி இல்லீங்க. இனி நீங்கதாங்க. உங்களைத்தான் நம்பியிருக்கிறேனுங்க! இந்தாங்க, இந்த நம்பர் ......" என்று சொல்ல ஆரம்பித்ததும், "ஓய் சாயபு! எழுந்திரும், கட்டும் மூட்டையை! இறங்கும் கீழே! போம் போம்" என்று சொல்லி நான் வீட்டிற்குள் ஓடிக் கதவைக் கெட்டியாய்த் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டேன். அரை மணி நேரம் கழித்து, மார்பு படபடப்பு அடங்கியதும், ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். சாயபு போய் விட்டார் என்று நிச்சயமாய்த் தெரிந்தபின் பகவத் கீதையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்.




பால்கார நரியா

ஜெயஸ்ரீ

அன்று சிங்கராஜன் சபையில் ஏகக் கலாட்டா! காட்டுப் பிரஜைகள் எல்லாம் ஒன்று கூடி, "அரசே! எங்களுக்குப் பால் கிடைப்பது குதிரைக் கொம்பாகப் போய் விட்டது. புல், பூண்டு—காய், கனி எல்லாவற்றையும் 'ரேஷன்' செய்திருக்கிறீர்களே, பாலை மட்டும் ஏன் 'ரேஷன்' செய்யக் கூடாது? பால்கார நரியார் எங்களையெல்லாம் ஏமாற்றி விடுகிறார்! எங்கள் குட்டிகளெல்லாம் பால் இல்லாமல் பசியால் துடி துடித்துப் போகின்றன. எல்லாப் பாலையும், 'ப்ளாக் மார்க்கெட்டி'ல் விற்று விடுகிறார்! அப்படியே எப்பொழுதாவது ஒரு நாள் கொடுத்தாலும் வெறும் தண்ணீராகக் கொடுக்கிறார்! இந்த அநியாயத்திற்கு நீங்கள் ஒரு வழி செய்யாவிட்டால் நாங்களெல்லாம் இக்காட்டை விட்டே போக வேண்டியதுதான்!" என்று முறையிட்டன.

சிங்கராஜன் யோசித்து இதற்கு ஒரு வழி செய்வதாகக் கூறி, மிருகங்களைச் சமாதானப் படுத்தி அனுப்பி வைத்தார்.



மறு நாள் சிங்கராஜா ஒரு சேவகனை அனுப்பி, பால்கார நரியாரை உடனே கூப்பிட்டு வரச் சொன்னார்.

நரியாரும் வந்து சேர்ந்தார்.

அவரை நோக்கி, "நரியாரே! நீர் காட்டில் பிரஜைகளுக்குப் பால் சரியாகக் கொடுக்காமல் ஏமாற்றி, 'ப்ளாக் மார்க்கெட்டில் விற்பதாக நாம் அறிகிறோம். ஆதலால் நாளை முதல் பால் ரேஷன் அமுலுக்கு வரும். உம்முடைய மாடுகளை நம்மால் நியமிக்கப்படும் அதிகாரியின் முன்னால் கறந்து, பால் ரேஷன் ஆபீசரிடம் ஒப்புவிக்க வேண்டும். பிறகு, காட்டுப் பிராணிகளுக்குத் தலைக்கு இவ்வளவு என்று பங்கிட்டு நம் உத்தியோகஸ்தர்கள் கொடுப்பார்கள்" என்று சிங்க ராஜா கட்டளையிட்டார்.

அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நரியாரும் தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

மறு நாள் முதல், அரசர் கூறியபடி பால் ரேஷன் அமுலுக்கு வந்தது. அதற்காக அரசரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளெல்லாம் தங்களுடைய கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். முக்கியமாக, நரியார் விஷயத்தில் அவர்கள் ரொம்ப ரொம்பக் கடுமையாக நடந்து கொண்டனர். பால்கார நரியார் பால் கறக்கும்போது, அதிகாரிகள் இமை கூடக் கொட்டாமல் விழித்த கண் விழித்தபடி இருந்தார்கள் என்றால், பார்த்துக்கொள்ளுங்களேன்!

நரியார் என்ன செய்வார், பாவம்! ரேஷன் ஆபீஸர் குரங்காருக்கு லஞ்சம் கூடக் கொடுப்பதாகச் சொல்லிப் பார்த்தார். ஊஹூம் .... அப்பொழுது கூடக் குரங்கார் அசைந்து கொடுக்கவில்லை!

காட்டு மிருகங்களுக்கெல்லாம் ரொம்ப ரொம்ப சந்தோஷம். நல்ல பாலாகத் தினசரி கிடைத்தால் யாருக்குத்தான் சந்தோஷமாயிருக்

காது? ஆனால் இந்த சந்தோஷம் வெகு நாள் நீடிக்கவில்லை. ரேஷன் ஆபீசர் குரங்காருக்கு ஒரு சமாசாரம் மிகுந்த வியப்பை அளித்தது.



பெரிய அண்டாக்களில் ஊற்றப் பட்டிருந்த பால் நாளுக்குநாள் குறைய ஆரம்பித்தது. குரங்கார் தினசரி பால்கார நரியாரிடம் பாலை அளந்துதான் வாங்கினார். என்றாலும், பங்கிடும்போது பால் குறைந்தே காணப்பட்டது. இதை அரசரிடம் தெரிவிப்பதற்குக் குரங்காருக்குப் பயமா யிருந்தது. ஆகவே, குறைந்த பாலுக்குத் தண்ணீரை ஊற்றிச் சரி செய்து எல்லா மிருகங்களுக்கும் பங்கிட்டு வந்தார்.

இதன் பலனாக, அரசருக்குப் பால் மறுபடியும் ஒரே தண்ணீரா யிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அரசர் மிகுந்த கோபத்தோடு பால்கார நரியாரைக் கூப்பிட்டனுப்பினார். பால்கார நரியாரும் அரசரின் முன்னால் வினயத்தோடு வந்து நின்றார். அவரைப் பார்த்து, "மீண்டும் ஆரம்பித்து விட்டீரா, உம்முடைய வேலையை?" என்று அரசர் ஆத்திரத்துடன் கேட்டார்.


"அரசே! தங்கள் உத்தியோகஸ்தரின் முன்னிலையில் கறக்கும் பாலில் நான் எப்படி தண்ணீர் கலக்க முடியும்? வேண்டுமானால், நீங்களே என்னுடன் காலை பால் விநியோகத்தின் போது வந்தால் உண்மை தெரியும்" என்றார் நரியார். அரசரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.


மறுநாள் நரியார் அரசரை அழைத்துக் கொண்டு போனார். அப்போது, குரங்கார் வழக்கம் போல் குறைந்த பாலுக்குத் தண்ணீரைக் கொட்டிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த அரசரின் முகத்தில் ஈயாடவில்லை.

அதுதான் சமயமென்று, "அரசே! தங்களுடைய ரேஷன் ஆபீஸர்தான் தினசரி இப்படித் தண்ணீரை ஊற்றிப் பாலை மிச்சம் செய்து 'பிளாக் மார்க்கெட்டில் விற்று வருகிறார்! இந்த அக்கிரமத்தைப் பற்றித் தங்களிடம் தெரிவிப்பதற்கு இந்த ஏழைக்குப் பயமா யிருந்தது. ஏனெனில், ஏழையின் பேச்சு அம்பலத்துக்கு வருமா? இப்பொழுது உண்மையைத் தாங்களே நேரில் வந்து உணர்ந்து கொண்டு விட்டீர்கள்! தங்களுடைய மேலான தீர்ப்பு எதுவா யிருந்தாலும் அடியேன் அதற்குக் கீழ்ப்படியக் காத்திருக்கிறேன்!" என்றார் நரியார்.

அவ்வளவுதான்! அரசர் உடனே குரங்காரை வேலையிலிருந்து நீக்கி விட்டார். மறுநாள் முதல் நரியாரே வழக்கம்போல் பால் கொடுப்பார் என்றும், ரேஷன் வேண்டாமென்றும் உத்தரவிட்டு விடடார்!

ஆனால், நரியார் தம்முடைய பெருச்சாளி நண்பரின் உதவியால், பால் நிரப்பிய அண்டாக்களின் அடியில் ஓட்டை செய்து, அதன் மூலம் பாலைக் குறையச் செய்து, குரங்காரைத் தண்ணீர் ஊற்றச் செய்த தந்திரம் சிங்க ராஜனுக்குத் தெரியவே யில்லை!





அதிக
செம்மையாகத்
துலக்குகிறது!
நீடித்து நிற்கிறது!
பற்களைச் சுத்தப்படுத்தி, வெண் மையாக்குவதில் 60% அதிக பயனளிக்க வல்லது.
ஒரு வருட உத்தரவாத முடையது.
இப்பொழுது ஒன்று வாங்குங்கள்
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
Dr. West's
TOOTH PASTE
மிருகங்களின் மயிரே கிடையாது!
விநியோகஸ்தர்கள்:
எம். டி. ஜெய்ஹூர் & கோ.
இன்கார்ப்பொரேடெட்,
120 வால் ஸ்ட்ரீட், நியூயார்க்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்

துரோணரின் முடிவு

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பீமனுடைய அசுர மனைவியின் குமா ன் கடோத்கஜன் என்று பாரதம் கேட்ட யாவரும் அறிவார்கள். மகாபாரத கதா பாத்திரங்களுக்குள் வீரமும் தீரமும் பலமும் குணமும் புகழும் எல்லாம் சேர்ந்து ஜொலிக்கும் வாலிபர்கள் இரண்டு பேர். அருச்சுனன் மகன் அபிமன் யுவும் பீமன் மகன் கடோத்கஜனும். இருவரும் யுத்தத்தில் பாண்டவர்களுக்காகப் பெரும் போர் செய்து மாண்டார்கள். மக்கள் வாழ்க்கையிலுள்ள துயரங்களையெல்லாம் பிழிந்தெடுத்துக் காட்டும் அற்புதமான கற்பனை மகாபாரதக் கதை. துயரங்களைக் காட்டிப் பெருண்மையான பரம்பொருளை நாடச் செய்யும் தரும நூல். சாதாரணக் கட்டுக் கதைகளின் போக்கே வேறு. மகா பாரதத்தின் முறையே வேறு. படிப்போருக்கு மயக்கமுண்டாக்கும் ஆபத்துகளும் கஷ்டங்களும் பலவற்றைத் தாண்டிக் கதா நாயகன் முடிவில் வெற்றிகரமாக ஒரு பெண்ணை விவாகம் செய்து முடித்துக் கொண்டு வாசகர்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்கும் கதைகள், அல்லது இதற்கு மாறாக எல்லாம் சுகமாகவே நிகழ்ந்து முடிவில் பெரிய ஏமாற்றம் தரும்படியான ஒரு கோர சம்பவத்தோடு திரைபடுவது, சாதாரணக் கதைகளில் காணப்படும் துறை. படிப்பவனுடைய உள்ளத்தைக் கரைத்து மகிழ்ச்சியிலும் துயரத்திலும் உணர்ச்சிகளை அலசி ஆட்டி முடிவில் மெய்ப்பொருளில் கொண்டு போய்ச் சேர்ப்பதாக இருக்கும் ராமாயணம் பாரதம் முதலிய தரும நூல்களின் போக்கு.

இரண்டு பக்கத்திலும் கிளர்த்தப்பட்ட வேஷ வேகத்திற்குப் பகலில் மட்டும் த்தப்பட்ட யுத்தம் திருப்தி தராமல் போயிற்று. பதினான்காம் நாளில் சூரியன் மறைந்த பின்னும் போர் செய்ய வேண் ம் என்று தீவட்டிகள் ஏற்றினார்கள். இருட்டே தங்களுக்குச் சௌகரியமென்று டோத்கஜனும் அவன் மாயக் கூட்டமும் ரியோதனன் படையை இரவில் பல கைத் தாக்கினார்கள். அந்த இராத்திரி த்தம் மகா அற்புதமாக இருந்தது.

பலவித சமிக்ஞைகளை நியமித்துக் கொண்டு இரண்டு பக்கத்திலும் வீரர்கள் இருட்டில் யுத்தம் செய்தார்கள். ஆயிரக் கணக்கான தீவட்டிகளை ஏற்றி வைத்துக் கொண்டு நடத்தப்பட்ட அந்த யுத்தம் அதுவரையில் பாரத தேசத்தில் நடைபெறாத நிகழ்ச்சியாக இருந்தது.

கர்ணனுக்கும் கடோத்கஜனுக்கும் அன்றிரவு போர் நடந்தது. கடோத்கஜனும் அவன் பூத கணங்களும் பொழிந்த அம்பு மாரியில் திரள் திரளாகத் தன் வீரர்கள் மாய்ந்து வீழ்ந்ததைக் கண்டு துரியோதனனுடைய உள்ளம் பதைத்தது "கர்ணனே! இவனை உடனே கொல்வாயாக. இல்லாவிடில் நம்முடைய சேனை முழுதும் அழிந்து போகும். இவனைச் சீக்கிரம் ஒழிப்பாயாக" என்று கௌரவர்கள் எல்லாரும் கர்ணனை வேண்டினார்கள்.

கர்ணனுக்கும் அந்தத் தருணத்தில் கடோத்கஜன்மேல் ஆத்திரமாகத்தான் இருந்தது. அவனால் அடிபட்டுக் கோபம் பொங்கியிருந்த சமயம் இந்திரன் தனக்குத் தந்திருந்த சக்தியாயுதத்தை வீசி அவனைத் தொலைக்கவே தீர்மானித்தான். அருச்சுனனுக்காகவே என்று அது வரையில் மந்திர பூர்வமாகக் காப்பாற்றி வந்திருந்த அந்தச் சக்தியைக் கர்ணன் எடுத்து கடோத்கஜன் மேல் எறிந்து விட்டான். இதனால் அருச்சுனன் பிழைத்தான். ஆனால் அதற்குப் பதிலாக பீமனுடைய அருமைப் புத்திரன் மாய்ந்தான். அந்தரட்சத்திலிருந்து கடோத்கஜனுடைய சரீரம் நிலத்தில் வீழ்ந்தது. பாண்டவர்கள் துக்கத்தில் மூழ்கினார்கள்.

• • •

யுத்தம் நிற்கவில்லை. துரோணருடைய வில் இடைவிடாமல் பாண்டவ சேனையாட்களை வீழ்த்திப் பாண்டவப் படையில் பயத்தைப் பரப்பிக்கொண்டிருந்ததைப் பார்த்த கிருஷ்ணன் "அருச்சுனா! இந்தத் துரோணரை யுத்தத்தில் வெல்லக்கூடியவர் யாரும் இல்லை. இவர் ஆயுதத்தைப் பிடித்து நிற்கும் வரையில் யாரும் அவரை யுத்த முறையில் தாக்கி ஜயம் பெற முடியாது. தருமத்தைப் புறக்கணித்துவிட்டு ஏதேனும் மோசம் செய்துதான் தீரவேண்டும். வேறு வழியில்லை. அசுவத்தாமன் இறந்ததாகக் கேள்விப்பட்டால் துரோணர் போர் புரிய மாட்டார். துயரத்தினால் ஆயுதத்தைக் கீழே போட்டு விடுவார். யாராகிலும் துரோணரிடம் சென்று அசுவத்தாமன் இறந்தான் என்று சொல்ல வேண்டும்" என்று சொன்னான்.

இதைக் கேட்ட அருச்சுனன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அசத்திய வழியை ஒப்புக்கொள்ள அவன் விரும்பவில்லை. கூட இருந்த மற்றவர்களும் மாட்டோம் என்றார்கள். அதருமச் செயலைச் செய்ய மனம் ஒவ்வாதவர்களாக இருந்தார்கள்.

யுதிஷ்டிரன் யோசித்தான். இந்தப் பாபத்தை நான் சுமக்கிறேன் என்று சொல்லி நெருக்கடியைத் தீர்த்தான்.

கடலைக் கடைந்தபோது தேவர்களுக்காகப் பரமேசுவரன் விஷத்தைக் குடிக்க முன் வந்தான். நம்பிய ஸுக்ரீவனைக் காப்பாற்ற ஸ்ரீராமன் பாபத்தைச் சுமந்தான். வாலியை அதரும முறையால் கொல்லத் தீர்மானித்தான். அவ்வாறே யுதிஷ்டிரனும் தன் எல்லையில்லாப் புகழைத் தியாகம் செய்ய உறுதி கொண்டான்.

பீமன் தன் கதையைத் தூக்கி அசுவத்தாமன் என்ற ஒரு பெரிய போர் யானையைக் கொன்றான். கொன்றுவிட்டு துரோணருடைய படைப் பகுதியண்டை சென்று அவர் காதில் விழும்படி உரத்த குரலில், "அசுவத்தாமனைக் கொன்றேன்" என்றான். இவ்வாறு சொல்லும்போது வீரனாகிய பீமசேனன் வெட்கப்பட்டான் என்று வியாசர் அழகாகச் சொல்லுகிறார்

இதைக் கேட்ட துரோணர் அச்சமயம் பிரம்மாஸ்திரத்தை எடுத்துப் பிரயோகிக்கும் தருவாயிலிருந்தார். குமாரன் இறந்துவிட்டான் என்கிற பேச்சைக் கேட்டதும் தயங்கினார். இது உண்மையாயிருக்காது என்று சந்தேகமும் பட்டார். அதன் மேல் துரோணர் யுதிஷ்டிரனை நோக்கி "என் மகன் இறந்தானா? உண்மையா?" என்று கேட்டார். மூன்று உலகங்களின் ஆதிபத்தியத்திற்காகவும் கூட யுதிஷ்டிரன் பொய் சொல்ல மாட்டான் என்று நம்பி யுதிஷ்டிரனைக் கேட்டார்.

அச்சமயம் கிருஷ்ணன் தன் மனதில் மிகவும் வேதனையடைந்தான். "யுதிஷ்டிரர் தருமத்தைப் புறக்கணிக்கப் பயப்பட்டாரானால் பாண்டவர்களுடைய நாசம் நிச்சயம். துரோணருடைய பிரம்மாஸ்திரம் வீணாகாது" என்று எண்ணினார். யுதிஷ்டிரனோ அசத்தியத்தைக் கண்டு பயத்தில் மூழ்கி நின்றான். ஆனால் வெற்றி பெற வேண்டும் என்கிற ஆசையும் உள்ளவனாக இருந்தான்.

என்னுடைய பாவமாக இருக்கட்டும் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு "அசுவத்தாமன் இறந்தது உண்மை" என்று உரக்கச் சொன்னான். சொல்லும் போது ஓரளவு அதருமத்திற்குப் பயந்து "அசுவத்தாமன் என்கிற யானை" என்று தாழ்ந்த குரலில் சேர்த்துச் சொன்னான்.

சஞ்சயன் திருதராஷ்டிரனிடம் "அரசனே! இவ்வாறு அதருமம் நடந்துவிட்டது" என்றான்.

யுதிஷ்டிரன் வாயில் இவ்வாறு பொய்ச் சொற்கள் வெளியான உடனே தரும புத்திரனுடைய ரதம், அதுவரையில் பூமியைத் தீண்டாமல் நான்கு அங்குலம் உயரச் சென்று கொண்டிருந்ததானது, திடீரென்று கீழே இறங்கி மண்ணைத் தொட்டதாம்.

அதருமமே வழக்கமாகிப் போன பூமியை தருமபுத்திரனுடைய சத்தியமானது அதுவரையில் தொடாமலிருந்தது. வெற்றிக்கு ஆசைப்பட்டு அசத்தியத்தில் இறங்கி விட்டபடியால் அவன் தேரும் பாபம் நிறைந்த பூமி மட்டத்திற்கு வந்து விட்டது என்கிறார் வியாசர்.

அசுவத்தாமன் இறந்தான் என்கிற மொழியைக் கேட்டதும் துரோணருக்கு உயிரிலுள்ள பற்று திடீர் என்று நீங்கிவிட்டது. அவர் அந்த நிலையில் இருக்கையில் பீமசேனன் அவரை மிகவும் கடுமையான மொழிகளால் நிந்திக்கலானான்.

"கெட்டுப்போன பிராமணர்கள் தமக்குரிய தொழிலை விட்டு விட்டு க்ஷத்திரியர்களுடைய தொழிலில் புகுந்தபடியால்லவோ அரசர்களுக்கு ஆபத்து வந்தது! அதரும வழியில் பிராம்மண குலத்தவர்கள் பிரவேசிக்காவிடில், அரசர்கள் மாண்டு போகாமல் தப்புவார்கள். கொல்லா விரதமே மேலான அறம் என்றும் அந்த அறத்திற்குப் பிராமணர்களே வேர் என்றும் அறிந்த நீர் அந்தணர் குலத்தில் பிறந்திருந்தும் வெட்கமில்லாமல் கொலைத் தொழில் செய்து வருகிறீர். ஏன் இவ்வாறு பாபத்தில் இறங்கினீர்?" என்றான்.

மகன் இறந்துவிட்டான் என்று ஏற்கெனவே உயிரில் வெறுப்புக் கொண்ட துரோணரை இந்த நிந்தனை மிகவும் துன்புறுத்திற்று. உடனே அஸ்திரங்களை எறிந்துவிட்டு துரோணர் தேர்த்தட்டின் மத்தியில் உட்கார்ந்து யோக நிஷ்டையில் அமர்ந்துவிட்டார்.

இந்தச் சமயத்தில் திருஷ்டத்யும்னன் கத்தி எடுத்து வந்து துரோணருடைய ரதத்தில் ஏறி "ஆ! ஆ!" என்று சேனையின் நாலா பக்கமும் சப்தம் எழுந்து கொண்டிருந்தபோதே ஒரே வெட்டாக வெட்டி ஆசானுடைய தலையை வேறு படுத்திவிட்டான். அவருடைய ஆத்மா பார்த்தவர்கள் கண்ணுக்குத் தெரியும்படியாக ஜோதி மயமாய் மேலுலகம் சென்றது.



ஸில்கார்ப்

(பேபர், க்ளாத், இரண்டும் சேர்ந்தது)
ரோல்கள், டிஸ்க்கள், பெல்ட்களாக
உள்ளவை

வைரம்போன்ற கடினமானவை; சொர சொரப்பானவை

தோல் வேலைகளுக்கு

மிகச்சிறந்தவை.

இமிடேஷன் தந்தவேலை, மிருதுவான
உலோக வேலைகளுக்கு ஏற்றவை.

மிகக் கடினமோ, மிருதுவாகவோ உள்ள எந்த மேல்
பரப்புக்கும் தகுந்த உப்புத்தாள்.

மானேஜிங் ஏஜெண்டுகள்:

முருகப்பா அண்டு சன்ஸ்.

தென்னிந்தியாவுக்கு ஸோல் விற்பனை ஏஜெண்டுகள்:
மார்ஷல் ஸன்ஸ் & கம்பெனி, (இந்தியா) லிமிடெட்,
தபால் பெட்டி நெ. 141, சென்னை.

அஜாக்ஸ் லிமிடெட் தயாரிப்பு.

A.S.K.TM.14


DROPS
குழந்தைகளுக்கு அதன்மீது பிராணன்!
குழந்தைகளுக்கு மிட்டாய் என்றால் பிராணன் — அதுவும் அச்வினி மிட்டாய்கள், டாப்பிகள் என்றால் கேட்கவே வேண்டாம்! ஏனெனில், இந்த மிட்டாய்களுக்கு யாராலும் தவிர்க்க முடியாத ஓர் அலாதி நேர்த்தியும், ருசியுமிருக்கத்தான் செய்கிறது. அன்றியும், குழந்தைகளுக்குத் தேகாரோக்கியமான க்ளுகோஸ் இவற்றில் அடங்கியிருக்கிறது. வெகு சீக்கிரம், பூராவும் சுயமாகவே இயக்கப் பெற்ற புதிய இயந்திரங்கள் வேலை துவக்கி வரும். அப்பொழுது, குழந்தைகளினுடையவும் பெரியவர்களினுடையவும் ருசியை ஒன்றுபோலக் கவரும் அற்புதமற்புதமான இனிக்கும் மிட்டாய்கள் கிடைக்கலாகும்!
அச்வினி
டாப்பிகள் (Toffees) — காராமல்கள் — அதிகப்படி காரமான பெப்பர்மின்டுகள்—பழவகைகளால் செய்யப் பட்ட பெப்பர்மின்டுகள் — சப்பரமெண்டுகள் (Cough Lozenges) — ஜுஜுப்புகள் — ஷுகர் கோட்டட் பதாம், பிஸ்தாக்கள் — ஆஸிட் டிராப்ஸ் (Acid Drops) — ஐஸிங் ஷுகர் (Icing Sugar)
ஸ்ரீ மகாலக்ஷ்மி ஷுகர் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
ஹமீரா, கபூர்த்தாலா ஸ்டேட்.
பம்பாய், மதராஸ், கத்தியவார் & தென் இந்தியாவுக்கு ஏஜென்டுகள்
மெஸர்ஸ். வோல்க்கார்ட் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்.
21, லிங்க செட்டித் தெரு : தபால் பெட்டி 91, மதராஸ்
ஷா துங்கி லீலாதர் பில்டிங், மட்டாஞ்சேரி ரோடு போலந்து
தபால் பெட்டி 47, கொச்சி

செய்யாறு மகாநாடு

ரா.கி.




தமிழ் நாட்டிற்குள்ளே வட ஆர்க்காடு ஜில்லா அதிர்ஷ்டம் செய்த ஜில்லா என்று சொல்ல வேண்டும். அந்த ஜில்லாவிலே பெரிய ரயில், சின்ன ரயில் இரண்டும் ஓடுகின்றன. அந்த ஜில்லாவிலே காடும், மலையும், ஆறும், ஏரியும் இருக்கின்றன; அறிவும் ஆற்றலும நம்பிக்கையும் நாணயமும் இருக்கின்றன. மேலும், அந்த ஜில்லாவிலே சிறந்த தேசபக்தர்கள்,—காங்கிரஸ் தொண்டர்கள், — 1920-ம் வருஷத்தில் தேச சேவையில் ஈடுபட்டு நாளதுவரை இடைவிடாமல் தேசத் தொண்டு செய்து வருகிறவர்கள், — பலர் இருக்கிறார்கள். அதோடு அந்த தேச பக்தர்கள் எல்லாரும் தங்களுக்குள் வேற்றுமையின்றிச் சண்டை சச்சரவின்றி, ஒரு முகமான ஒற்றுமையுடன், தேசத்தொண்டு ஆற்றி வருகிறார்கள்.

சென்ற வருஷத்தில், மேற்படி வட ஆர்க்காடு ஜில்லா காங்கிரஸ் தொண்டர்கள் தமிழகத்தின் நன்மையைக் கருதி ஒரு சிறந்த முயற்சியை ஆரம்பித்தார்கள். காங்கிரஸிலிருந்து விலகியிருந்த ராஜாஜியை மறுபடியும் காங்கிரஸிற்குள் வரவேற்றுத் தமிழ்நாட்டில் காங்கிரஸ் வேலையை ஒற்றுமையாக நடத்த வேண்டும் என்பதுதான் அந்த முயற்சி.

மேற்படி முயற்சிக்கு ஒரு பக்கத்தில் பலமான எதிர்ப்பும் மற்றொரு பக்கத்தில் பலமான ஆதரவும் ஏற்பட்டுச் சுமார் நாலு மாத காலம் தமிழ் நாட்டு அரசியல் அல்லோல கல்லோலப்பட்டது. கடைசியாக, மேற்படி நன்முயற்சி இருதரப்புக்கும் திருப்தியளிக்கும் முறையில் வெற்றிகரமாக முடிவடைந்ததை நேயர்கள் அறிவார்கள். அந்த சந்தோஷச் செய்தி வெளியான அதே தினத்தில், அதாவது சென்ற டிசம்பர் 30உ நடைபெற்ற செய்யாறு தாலுகா அரசியல் மகாநாட்டுக்கு நான் போயிருந்தேன். ராஜாஜியின் தலைமையில் நடந்த மேற்படி மகாநாட்டில் உற்சாகம் கங்கு கரையில்லாமல் பொங்கி ஓடியது.

செய்யாறு மகாநாட்டுக்கு வந்திருந்த வடஆர்க்காடு ஜில்லா காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரும், அன்றைக்கு நடக்கும்போது மார்பு நிமிர்ந்து நடந்தார்கள். உட்காரும்போது தலை நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.



மத்தகஜத்தின் மீது மூவர்ண வெற்றிக் கொடி ஆனந்தமாய்ப் பறக்கிறது.

ஒவ்வொருவரும் "நாம் ஆரம்பித்த காரியம் இவ்வளவு வெற்றிகரமாக முடிந்ததே!" என்ற பெருமிதத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

* * *

வடார்க்காடு ஜில்லா வாசிகளின் தேச பக்தி, காங்கிரஸ் அபிமானம், தலைவர்களிடம் அவர்களுக்குள்ள விசுவாசம் முதலிய குணங்களுக்கு அறிகுறியை அந்த ஜில்லாவின் எல்லையை மிதிக்கும்போதே கண்டு கொண்டேன்.

காஞ்சிபுரத்திலிருந்து செய்யாறு போகும் சாலையில் ஆறு மைல் போனவுடன், சாலை நடுவில் ஜனங்கள் கும்பலாக நின்று ராஜாஜி சென்ற காரைத் தடுத்து நிறுத்தினார்கள். காரின் கதவைத் திறந்து மங்களகரமான மஞ்சள் நிற செவ்வந்திப் பூமாலைகளை ராஜாஜியின் கழுத்திலும் ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை கழுத்திலும் பலாத்காரமாகச் சுமத்தினார்கள். "வந்தே மாதரம்" "மகாத்மா காந்திக்கு ஜே!" "ராஜாஜிக்கு ஜே!" என்ற கோஷங்கள் காதைச் செவிடுபடுத்தின.

அந்தக் கூட்டத்தில் ஒருவரைப் பார்த்து, நான், "இங்கே என்ன விசேஷம்? எதற்காக இந்தக் கூட்டம்?" என்று கேட்டேன். அவர், "தெரியாதா? இங்கேதான் வடார்க்காடு ஜில்லா ஆரம்பமாகிறது. எங்களுக்குப் பக்கத்துக் கிராமம்; தலைவர்களை எங்கள் ஜில்லாவுக்கு வரவேற்க வந்தோம்" என்றார்.

இதேமாதிரி திருவத்திபுரம் போய்ச் சேரும் வரையில் எட்டு இடங்களில் காரை நிறுத்தி வரவேற்பு உபசாரங்கள் நடந்தன. சில இடங்களில் தலைவர்களைக் கீழே இறங்கச் செய்து, சாலை ஓரமாய் அமைத்திருந்த மேடைக்கு அழைத்துச் சென்று, வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்து, முந்திரிப் பருப்பு, திராக்ஷைப் பழம் வழங்கினார்கள்.

கடைசியாக, திருவத்திபுரம் எல்லைக்கு வந்ததும், பொதுஜன உற்சாகத்துக்கும் எல்லையைக் காணவாயிற்று.

சாலையில் சுமார் இரண்டாயிரம் ஜனங்கள், இருநூறு மூவர்ணக் கொடிகளுடனும், ஒரு நூறு செவ்வந்திப் பூமாலைகளுடனும், ஒரு பெரிய பிரம்மாண்ட யானையுடனும் தலைவர்களை வரவேற்கக் காத்திருந்தார்கள். அவர்கள் போட்ட ஜே கோஷத்தின் சத்தத்தில், ராஜாஜி, "சீக்கிரம் ஜாகைக்குப் போவோம்" என்று பல தடவை கூறியது, பக்கத்திலிருந்த ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையின் காதிலே கூடக் கேட்கவில்லை.

* * *

தலைவரையும், மற்றும் ஸ்ரீ சிவஞான கிராமணி போன்ற தேக திடமில்லாதவர்களையும் ஜாகையில் விட்டு விட்டு மற்ற

வர்கள் ஊர்வலம் கிளம்பினார்கள். கூட்டத்தின் முன்னணியில் ஸ்ரீமான்கள் வ. வேதரத்தினம், பெரிய அண்ணாமலை, சின்ன அண்ணாமலை, ஸ்ரீ சத்தியானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் முதலியோர் கழுத்தில் செவ்வந்திப் பூமாலைகளுடன் ஜம்மென்று முன்னணியில் நடந்து செல்ல, அவர்களைத் தொடர்ந்து பெரிய கூட்டமும், கூட்டத்திற்கு நடுவிலே மத்த கஜமும் சென்றன; மத்த கஜத்தின் மேலே மூவர்ண தேசியக் கொடி கம்பீரமாய்ப் பறந்தது.

* * *

மத்தியானம் மூன்று மணிக்கு மகாநாடு கூடிற்று. மகாநாட்டுக் கென்று பந்தல் போட்டு, மேடையும் அமைத்திருந்தார்கள். மகா நாட்டுப் பந்தலுக்குள்ளே ஒரு பங்கு ஜனங்களும், பந்தலைச் சுற்றி மூன்று பங்கு ஜனங்களும் இருந்தார்கள். மொத்தம் பதினாயிரம் பேர் இருக்கலாம்.

மேடையில் தலைவர் ராஜாஜியும் சென்னையிலிருந்து வந்த ஸ்ரீ கிராமணி முதலியவர்களையும் தவிர, வடார்க்காடு ஜில்லா காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும் வீற்றிருந்தார்கள். வடார்க்காடு ஜில்லாவில் எந்தத் தாலுகா மகாநாடு கூடினாலும், இந்த ஜில்லாத் தலைவர்கள் எல்லாரையும் மேடையில் காணலாம். அவர்கள் யார் யார் என்றால், ஸ்ரீமான்கள் சி. பெருமாள்சாமி ரெட்டியார், என். அண்ணாமலைப் பிள்ளை, ஆரணி சீனிவாசராவ், வேலூர் குப்புசாமி முதலியார், ராணிப்பேட்டை கலியாணராமய்யர் ஆகியவர்கள் தான்! வடார்க்காடு ஜில்லா இன்று தேசிய இயக்கத்தின் முன்னணியில் நிற்பதற்கு இந்தப் பஞ்சபாண்டவர்கள் தான் காரணமானவர்கள். இவர்களோடு ஒத்துழைத்துப் பூரணமான ஒற்றுமையுடன் வேலைசெய்யும் காங்கிரஸ்வாதிகள் ஒவ்வொரு தாலுகாவிலும் இருக்கிறார்கள். அவர்களில் செய்யாறு தாலுக்காவின் தலைவர் ஸ்ரீ கோபால முதலியார். இவர் 1921-ம் வருஷத்துப் போராட்டத்தில் சிறை சென்றபோது இருபது பேருடன் சேர்த்துக் காலிலே தொடர் சங்கிலி விலங்கு பூட்டப் பட்டிருந்தவர். அப்படியென்றால் என்னவென்று தெரிகிறதா? இருபது பேருக்குத் தனித்தனியாகக் காலிலே விலங்கு பூட்டப் பெற்றிருக்கும். ஒவ்வொருவர் கால் விலங்கையும் இன்னொருவர் கால் விலங்கோடு சங்கிலியால் பிணைத்திருக்கும். ஆக, இந்த இருபது பேரில் ஒருவர் ஒரு அடி முன்னால் எடுத்து வைக்க வேண்டுமானால் மற்றப் பத்தொன்பதுபேரும் ஒத்துழைத்தால் தான் முடியும்! இருபது பேரும் சேர்ந்துதான் நடக்க வேண்டும்; சேர்ந்துதான் சாப்பிட வேண்டும்; சேர்ந்துதான் படுத்துறங்க வேண்டும்! ஒருவரில்லாமல் ஒருவர் நகரவே முடியாது; புரண்டு படுக்கக்கூட முடியாது!

தேசத்துக்காக இத்தகைய பயங்கரக் கொடுந் தண்டனையை அனுபவித்தவர் — பலாத்கார ஒத்துழைப்பில் பயிற்சி பெற்றவர்—ஸ்ரீ கோபால முதலியார். இவருடைய தலைமையில் செய்யாறு தாலுகா காங்கிரஸ் கமிட்டியார் நாலு மாதத்துக்கு முன்னால் கூடி ராஜாஜியை ஏகமனதாகக் காங்கிரஸுக்குள் வரவேற்று, அவருடைய தலைமையில் தங்கள் பரிபூரண நம்பிக்கையைத் தெரிவித்தார்கள். அதே ஸ்ரீ கோபால முதலி

பந்தலுக்குள்ளே ஒரு பங்கும் பந்தலுக்கு வெளியில் மூன்று பங்கும் ஜனங்கள் கூடியிருந்தார்கள்



யார் இன்று மகாநாட்டில் வரவேற்பு சபைத் தலைவரா யிருந்து ராஜாஜியையும் மற்றப் பிரதிநிதிகளையும் வரவேற்றார்.

ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை கொடி ஏற்று விழா நடத்தி விட்டுப் பேசிய பேச்சு ஒரே உணர்ச்சி மயமா யிருந்தது.

மகாநாட்டைத் திறந்து வைத்த சர்தார் வே. வேதரத்தினம். — தமிழ் நாட்டு அரசியலில் ஏற்பட்ட சமரசத்தைக் குறித்துத் தமது அளவுகடந்த மகிழ்ச்சியை வெளியிட்டார்.

பிறகு, திருவத்திபுரம் பஞ்சாயத்து சபை முதலிய பல ஸ்தாபனங்களின் சார்பாக ராஜாஜிக்கு உபசாரப் பத்திரங்கள் படித்துக் கொடுத்தார்கள். ஒவ்வொரு உபசாரப் பத்திரத்திலும் 'ராஜாஜி பிரதம மந்திரியாக வரவேண்டும்' என்ற ஆசை தெரிவிக்கப் பட்டிருந்தது.

சென்ற ஒருமாதமாக நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ராஜாஜி எங்கே போனாலும், அங்கே அவரைப் பற்றிப் பேசுகிறவர்களும் உபசாரப் பத்திரம் வழங்குகிறவர்களும் ராஜாஜி மீண்டும் பிரதம மந்திரியாக வரவேண்டும் என்ற ஆசையைத் தெரிவிக்கிறார்கள்.

இதற்குப் பதில் சொல்லும்போது, பிரதம மந்திரி வேலையின் பொறுப்புக்களையும் கஷ்டங்களையும் பற்றி ராஜாஜி குறிப்பிடவேண்டி வருகிறது.

பத்திரிகைகளில் ராஜாஜியின் பேச்சை மாத்திரம் வெளியிடுகிறார்கள். பத்திரிகை படிப்பவர்களுக்கோ, "ராஜாஜி எங்கே போனாலும் பிரதம மந்திரி வேலையைப் பற்றியே பேசுகிறாரே?" என்று தோன்றுகிறது. ராஜாஜியின் எதிரிகள் உடனே, "பார்த்தீர்களா; ராஜாஜியின் பதவி மோகத்தை?" என்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், "ராஜாஜி பிரதம மந்திரியாக வேண்டும்" என்னும் மோகம் தமிழ் நாட்டுப் பொது மக்களுக்குத்தான் அபாரமா யிருக்கிறது. "ராஜாஜி பிரதம மந்திரியானால் நாம் ஒவ்வொருவரும் மந்திரியாவதுபோல்" என்று பொது மக்கள் நம்புவதுதான் இதற்குக் காரணம். ராஜாஜிக்கோ பதவி பயந்தான் அதிகமாக இருக்கிறது!

• • •

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வாதிகளுக்குள் ஏற்பட்டிருந்த தகராறு சமரசமாகத் தீர்ந்தது பற்றி மகிழ்ச்சி யடைவதாகவும், ராஜாஜியின் தலைமையில் இனி எல்லாரும் ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டுமென்பதாகவும் கொண்டுவரப்பட்ட முக்கிய தீர்மானம் மகத்தான கரகோஷங்களுக்கிடையே ஏகமனதாக நிறைவேறியது.

பிறகு பல பிரமுகர்கள் பேசினார்கள். தமிழ்ப் பண்டிதர் அண்ணாமலை, 'அஸ்தமனமே இல்லாத பிரகாசமான' பிரிட்டிஷ் சர்க்காரை இந்தியாவிலே மட்டும் இருக்கக் கூடாதென்று விரட்டி அடித்து விட்டு, ராஜாஜியை ஸ்ரீ ராமபிரானுக்கு ஒப்பிட்டார். ஸ்ரீ கிராமணியார், தமிழ் நாட்டின் பழைய சரித்திரத்திலிருந்து குமணன் கதையை எடுத்து, குமணனை ராஜாஜிக்கு ஒப்பிட்டுத் தமிழ்ப் பண்பும் உணர்ச்சியும் பொங்கும்படி பேசினார். வேலூர் குப்புசாமி முதலியார் — என் ஐயனே! — சக்கைப் போடு போட்டார். கோடை இடி குப்புசாமி முதலியாருக்கு ஒரு தம்பி வேலூரிலேயே உண்டு என்று தெரியவந்தது. அவர் பெயர் மாணிக்க முதலியார். நல்ல சங்கீத வித்வானைப்போல் பேச்சிலே கனபரம் கொடுத்து இடிவெளுத்து வாங்கினார்.

ஸ்ரீ சேலம் சுப்பிரமணியம் ஓர் அரிய கதா காலட்சேபமே செய்து விட்டார். அதன் முடிவில் "ராஜாஜி வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எல்லாரும் கை தூக்குங்கள்" என்று அவர் சொன்னபோது, பத்தாயிரம் கைகள் பளிச்சென்று மேலே சென்றன. "ராஜாஜி வேண்டாம் என்பவர்கள் கை தூக்குங்கள்" என்றபோது, ஒரு கை கூட மேலே உயரவில்லை. "நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். ஆனாலும் சிலர் தமிழர்கள் ராஜாஜியை விரும்பவில்லை என்கிறார்கள். நீங்கள் எல்லாரும் தமிழர்கள் இல்லையா? வேறு எந்த நாட்டிலிருந்து வந்தீர்கள்?—இன்னும் ஒரு விஷயம் சொல்கிறேன். இப்படி நீங்கள் ராஜாஜி வேண்டும் என்று கை தூக்கிய விஷயத்தை ஒரு பத்திரிகையிலும் போட மாட்டார்கள்" என்றார். (இதோ ஒரு பத்திரிகையில் போட்டிருப்பதை அவர் கவனிப்பார் என்று நம்புகிறேன்)

கடைசியாக, செய்யாறு தொகுதியின் எம். எல். ஏ ஸ்ரீ டி. ராமலிங்க ரெட்டியார் தமது மழலைத் தமிழில் எல்லாருக்கும் வந்தனோபசாரம் அளித்தார்.

• • •

காங்கிரஸ் அபிமானத்திலும், காங்கிரஸ் ஊழியர்களுக்குள்ளே மனமொத்த ஒற்றுமையிலும், தேச பக்தியின் வீராவேசத்திலும், சுயநலமற்ற தியாகத் தொண்டிலும் இன்று வடாற்காடு ஜில்லா தலைசிறந்து நிற்கிறது. இந்தப் புகழுக்கு என்றும் பங்கம் வராமல் அந்த ஜில்லாவின் தலைவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.



பதிலுக்குப் பதில்!

"எங்கள் ஊரில் தந்திக் கம்பிகள் முன் காலத்திலேயே இருந்தன என்பதற்குச் சாட்சி 600 அடிக்குக் கீழ் வெட்டிப் பார்த்தபொழுது நீண்ட கம்பிகள் அகப்பட்டதுதான்!"



"எங்கள் ஊரில் முற்காலத்தில் கம்பி யில்லாத் தந்தி இருந்தது என்பதற்குச் சாட்சி 1000 அடிக்குக் கீழ் வெட்டிப் பார்த்தும் ஒன்றும் அகப்படாததுதான்!"

—எஸ். சீனிவாசன்.

○

நல்ல நடிகர்!

முதலாளி (நடிகரை நோக்கி):— இதற்கு முன் நீர் எந்த நாடகத்திலாவது நடித்ததுண்டா?

நடிகர்:—ஓ! கிருஷ்ண லீலாவில் அசரீரியாக நடித்திருக்கிறேன்!

—ஆர். அம்புஜா சருநாத்.

★

என்ன காரணம்?

விருந்தாளி:—டேய், பிச்சு! காப்பி சாப்பிட்டையா?

பிச்சு:—இல்லே மாமா!

விருந்தாளி:—உங்காத்திலே எப்போடா எல்லாருக்கும் காப்பி போடுவார்கள்?

பிச்சு:—நீங்க வெளியே போனதும் காப்பி போட்டுடுவா மாமா! —ராமநாதன்.

○

போதாத காரணம்

ஒரே தெருவிலுள்ள மூவர், கமிஷனரிடம் போய், "என்னுங்க! எங்க தெருவிலே ஒரு தண்ணீர்க் குழாய்தான் இருக்குதுங்க! தண்ணீர் போதலீங்க!" என்று முறை யிட்டனர்.

கமிஷனர்:—உங்க தெருவிலே பத்துக் குடும்பங்கள் தானே இருக்கு. ஏன் போதவில்லை?

மூவரில் ஒருவர்:—நாங்க பால் வியாபாரிங்க ஆச்சுங்களே! —ஆர். சுந்தராம்பாள்.

★

வேண்டுகோள்!

பாகவதர்:—சொன்னச் சொன்ன சப்தம் போட்டால் இன்று உபன்யாசம் கிடையாது!

(கூட்டத்தி லிருந்து ஒரு குரல்):—தயவு செய்து உபன்யாசத்தை நிறுத்த வேண்டாம்: உங்களை நம்பி வந்த எங்களுக்குத் தூக்கம் கெட்டு விடுமே! —மணி பாப்பா.

ஒரே வழி

ராஜி:—நீ ஏன் அவரைக் கலியாணம் செய்து கொள்ள மறுக்கிறாய்?

புஷ்பா:—அவர் ஒரே பிடிவாதக்காரராய் இருக்கிறார். நேற்று நான் சொர்க்கம், நரகம் என்று இரண்டு உண்டு என்றேன். அவர் நரகமே கிடையாது என்று சாதிக்கிறார்.

ராஜி:—அப்படியா சொன்னார்? நீ பேசாமல் அவரைக் கலியாணம் செய்து கொள். நாலே நாட்களில் அவர் நரகம் உண்டு என்று ஒப்புக் கொள்கிறாரா இல்லையா, பார்!—டி.எஸ். சங்கர்

★

தாம்பத்ய ஒற்றுமை!

கணவன்:—என்ன அது? பக்கத்து வீட்டில் அவர்கள் ஏன் அப்படிச் சண்டை போட்டுக் கொள்ளுகின்றனர்?

மனைவி:— அதுவா, பக்கத்து வீட்டுப் பங்கஜம் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினளாம். அதற்குச் சன்மானமாக வந்த பத்து ரூபாயை அவள் கணவர் கேட்கிறார். அதைத் தரமாட்டேன் என்று அவள் சண்டை போடுகிறாள்!

கணவன்:—அப்படி. அவள் என்ன கட்டுரை எழுதி யிருந்தாளாம்?

மனைவி:—'தாம்பத்ய ஒற்றுமை' என்று ஒரு கட்டுரை! —என். வி. துரைசாமி.

○

காரணம்!

முதல் மாடிக்காரர்:—என்ன போஸ்ட்மேன், நாலாவது மாடியில் இருப்பவர் பெரிய வியாபாரியோ? தினம் அவருக்குக் கடிதம் வருகிறதே?

போஸ்ட்மேன்:—இல்லீங்க சாமி! அன்று ஒரு நாள் நான் அவருடன் சண்டை போட்டேன். அன்றைய தினத்திலிருந்து அவரே தினம் ஒரு கடிதம் எழுதிப் போட்டு என்னை நாலு மாடிகள் ஏறி இறங்க வைக்கிறார்! —கே. கோபாலன்.

★

சரியான பதில்

டிக்கெட்டையும் சில்லறையையும் பெற்றுக் கொண்டு வந்த கோபு, பத்து நிமிஷத்திற்கெல்லாம் டிக்கெட் குமாஸ்தாவிடம் போய், "ஸார்! சில்லறையைத் தவறாகக் கொடுத்து விட்டீர்களே!" என்றான்.



குமாஸ்தா (விறைப்பாக):— அதெல்லாம் இப்போது வந்து சொன்னால் முடியாது. டிக்கெட் வாங்கும்போதே சொல்லியிருக்கணும். தெரிந்ததா? போம், போம்!

"நீங்கள் சொன்னால் சரி! ஒரு ரூபாய் அதிகமாய்க் கொடுத்து விட்டீர்கள். அதைத்தான் சொல்ல வந்தேன்!" என்று நடையைக் கட்டினான் கோபு. —ஆ. குப்புசாமி.

அந்தப் பின் குறிப்பு!

உமாபுத்ரன்



"அப்பாடா!" என்று சொல்லிக்கொண்டே கூடத்திலிருந்த சாய்வு நாற்காலியில் 'தொப்'பென்று சோர்ந்து விழுந்தாள் வாணி. ஆமாம், ஒரு நாள், இரண்டு நாள் என்றால் பொறுத்துக் கொள்ளலாம்; இரண்டு மாதமாகக் கணவனிடமிருந்து கடிதம் வராவிட்டால் ஒரு அபலை ஸ்திரீயின் மனம் என்ன பாடுதான் படாது?

உள்ளே சமையலறையில் தாயார் பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருந்தாள். பூஜையறையில் தகப்பனார் முணுமுணுக்கும் குரலில் ஏதோ பாராயணம் செய்து கொண்டிருந்தார். ஸ்திரமாக ஒரு விஷயத்திலும் சிந்தனையின்றிச் சோர்ந்து படுத்த வண்ணம் வெறும் வெளியை நோக்கிக் கொண்டிருந்தாள் வாணி.

*   *   *

கல்யாணமாகி ஆறு மாதம்தான் நாராயணனும், வாணியும் தனி வாழ்க்கை நடத்தினார்கள். அதற்குள் இந்த யுத்தம் வந்து சேர்ந்தது. நாராயணன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் விமானப் படையில் சேர்ந்து விட்டான். வாணியிடம்கூட, சேர்ந்த பிறகுதான் தெரிவித்தான்.

வாணி படித்த பெண். கணவன் செய்தது தவறு என்பதை அவள் எடுத்துக் காட்டினாள். உடனே நாராயணன் தன் வழக்கமான தோரணையில், "வாணி, வீட்டில் ஆண் சுதந்திரத்துக்காகப் போராடுவதுடன் எங்கள் பொறுப்பு தீர்ந்துவிடவில்லை. அந்தப் போராட்டத்தோடு போராட்டமாக மனித சமூகத்தின் விடுதலைக்காகவும் யுத்தம் செய்தாக வேண்டியிருக்கிறது. ஆனால் ஆண் சுதந்திரப் போராட்டத்தைப் போல் இது அவ்வளவு பெரிதல்ல; இந்த யுத்தத்தில் 'வெற்றி கிடைக்கும்' என்ற நம்பிக்கையுண்டு அதனால்தான் சேர்ந்திருக்கிறேன்!' என்று கேலி செய்தான்.

'ட்ரெய்னிங்' முடிந்த சிறிது நாட்களுக்கெல்லாம் நாராயணனை 'இந்தியாவில் எங்கேயோ ஓரிடத்திற்கு' மாற்றினார்கள். எங்கு போனாலும் அவன் வாணிக்கு மாதம் இரண்டு கடிதம் எழுதத் தவறியதேயில்லை. திடீரென்று ஒருசமயம் ஒரு மாதத்துக்கு அவனிடமிருந்து கடிதமே வரவில்லை. வாணி புழுவாய்த் துடித்தாள். அவள் பொறுமையை மிகவும் சோதித்த பிறகு ஒரு கடிதம் வந்தது. அதை வாசித்தபோது வாணிக்குத் தூக்கி வாரிப் போட்டது. கடிதம் 'பிரான்ஸில் எங்கேயோ ஓரிடத்திலிருந்து' வந்திருந்தது.

இதற்குப் பிறகு ஒரே மாதத்தில் அவனுடைய சலியாத உழைப்பினாலும், புத்தி சாதுர்யத்தினாலும் அவனுக்கு மேலும் 'ப்ரமோஷன்' ஆயிற்று. இதைப் பற்றி எழுதியதுதான் கடைசியாக அவனிடமிருந்து வந்த கடிதம். அந்தக் கடிதத்தில் அவன் தன்னுடைய புதிய வேலையைப் பற்றி எழுதியிருந்தான். அவனுடைய 'யூனிட்' யுத்த அரங்கத்துக்குப் பக்கத்திலே இருப்பதால் அங்கு விளக்கணைப்பு விதிகள் மிகக் கடுமையாக இருந்தன. சூரிய அஸ்தமனமாகி ஒரு மணி நேரத்துக்குப் பிறகு எந்தக் கூடாரத்திலும் ஒரு சிறிய வெளிச்சம் கூடத் தெரியக் கூடாது. இந்த விதியை மீறியவரும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு வந்தார்கள். இவ்விஷயத்தில் மரண தண்டனை சர்வ சாதாரணமாகக் கொடுக்கப்படும் என்று விதியில் கண்டிருந்தது.

அந்தக் கடிதம் வந்து இன்றுடன் இரண்டு மாதங்களாகிவிட்டன. இந்த இரண்டு மாதங்களுக்குள் நாராயணனுக்கு வாணி ஆறு கடிதங்கள் எழுதி விட்டாள். பதில் வந்தால்தானே? வாணிக்கு மனதை என்னமோ செய்தது. ஏக்கத்துடன் அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்

திருந்தான். தூக்கம் தூக்கமாக வந்தது அவளுக்கு.

திடீரென்று 'தபால்' என்ற சத்தம் கேட்டுத் துள்ளிக் குதித்தெழுந்தாள் வாணி. தபால்காரன் கையிலிருந்து அவளாகவே 'வெடுக்'கென்று கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டு மறுபடியும் கூடத்துக்கு ஓடி வந்தாள். அப்பா, ஒரு மட்டுக்கும் கவலை விட்டது. கடிதம் நாராயணனிட மிருந்து தான் வந்திருந்தது. மறுபடியும் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு ஆவலுடன் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள். இவ்வளவு நாள் கடிதம் எழுதாததற்கு வேலைத் தொந்தரவுதான் காரணம் என்றும், அந்த நள்ளிரவில் தான் ஒரு மெழுகு வத்தியை வைத்துக்கொண்டு அவளுக்குக் கடிதம் எழுதுவதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்.


• • •

உள்ளே தகப்பனார் இன்னும் அதே மூணுமுணுக்கும் சுருதியில் பாராயணம் செய்து கொண்டிருந்தார். வாணி கடிதத்தைப் படித்து உறைக்குள் வைக்கப் போனவள் திடுக்கிட்டு அதை மறுபடியும் எடுத்துப் பிரித்தாள். கடைசித் தாளின் பின் பக்கத்தில் ஒன்றும் எழுதப்பட வில்லை யென்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் அப்பக்கத்தில் ஒரு பின் குறிப்பு இருப்பது இப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது.

"வாணி, இந்தப் பின் குறிப்பை வாசிக்கு முன் உன் மனதைக் கல்லாக்கிக் கொள். அதைரியப்பட்டுக் கொண்டு தாறுமாறாக எதாவது செய்துவிடாதே!

"நேற்றிரவு இக் கடிதத்தை எழுதி முடிக்கும் சமயம் பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ரௌத்திராகாரமாக என் 'யூனிட்'டின் தலைமை யதிகாரி நீட்டிய துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார். என்னை யறியாமலேயே என் கைகள் உயர்ந்தன. மறு விநாடி அவர் பாய்ந்து சென்று எரிந்து கொண்டிருந்த மெழுகு வத்தியை அணைத்து விட்டுத் துப்பாக்கி முனையில் என்னை இட்டுச்

பிச்சைக்காரன் சினிமா பார்க்கிறான்!



சென்றார். நேற்று இரவு முழுவதும் காவல் கைதியா யிருந்தேன்.

"இன்று காலை விசாரணை நடந்தது. பொறுப்புள்ள ஆபீஸராக இருந்தும் விளக்கணைப்பு விதிகளை மீறியதற்காக எனக்கு மரண தண்டனை யளிக்கப்பட்டது. இன்றிரவு பன்னிரண்டு மணிக்குத் தண்டனை நிறைவேற்றப்படும். அதிகாரிகளின் விசேஷ அனுமதியுடன் இந்தப் பின் குறிப்பை எழுதுகிறேன். தண்டனை நிறைவேறிய பிறகு உனக்கு இக்கடிதம் அனுப்பப்படும்."

"அம்மா!" என்று ஈனமாக அலறிக் கொண்டே கீழே விழுந்தாள் வாணி.

* * *

"வாணி! வாணி!!" என்று தூரத்திலிருந்து யாரோ அழைப்பது போலிருந்தது. சத்தம் வர வரப் பக்கத்தில் கேட்டது. திடீரென்று விழித்துக் கொண்டாள் வாணி. எதிரே பெற்றோர் இருவரும் நின்று பரபரப்புடன் "வாணி! ஏன் அப்படி அலறினாய், அம்மா?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

வாணி சுற்று முற்றும் பார்த்தாள்; சாய்வு நாற்காலியிலிருந்து தான் கீழே விழுந்து விட்டது அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. கீழே சற்றுத் தூரத்தில் நாற்காலிக் கடியில் அந்தக் கடிதம் உறைக்குள் பாதி திணிக்கப்பட்டுக் கிடந்தது. 'சட்'டென்று பாய்ந்து அதை எடுத்துப் பிரித்தாள் வாணி. கை நடுங்கக் கடிதம் முழுவதையும் மறுபடியும் வாசித்தாள். பெற்றோர் இருவரும் திக்பிரமை பிடித்தவர்கள்போல் நின்றுகொண் டிருந்தார்கள். கடைசித் தாளின் பின் பக்கத்தில் மூன்று வரிகளில் ஒரு பின் குறிப்பு காணப்பட்டது.

"ஒரு விஷயம் எழுத மறந்து விட்டேனே! பகைவரை வெகு தூரம் பின்னுக்கு விரட்டி விட்டதால் விளக்கணைப்பு விதிகளை யெல்லாம் இங்கு எடுத்து விட்டார்கள். அதனால்தான் இந்தக் கடிதமாவது என்னால் எழுத முடிகிறது."


இந்தப் பின் குறிப்புக்கும் அப்புறம் ஒரு உப பின் குறிப்பு காணப்பட்டது.

"ஒரு சந்தோஷ சமாசாரம்: எனக்குக் கூடிய சீக்கிரம் லீவ் கிடைக்கும் போலிருக்கிறது."

இதைப் படித்ததும் வாணி ஆனந்தத்தினால் அப்படியே தன் தாயாரை இறுகக் கட்டிக்கொண்டு கண்ணீர் வடித்தாள். ஆனால் அவர்களுக்கு விஷயம் புரிந்தால் தானே? தான் கடிதத்தை முடிப்பதற்கு முன்னாலேயே களைப்பினால் தன்னை யறியாமலேயே தூங்கி விட்டதையும், அதன் விளைவாக ஏற்பட்ட கனவையும் வாணி அவர்களிடம் சொல்லி ஒரு முழு நிமிஷம் ஆனபிறகு இரண்டு பேரும் ஞானோதயம் வந்த மாதிரி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தார்கள். அன்று பூராவும் வீட்டில் ஒரே சிரிப்பும், கொம்மாளமுமா யிருந்தது.

★ ○ ★

அது என்ன பொருள்?



காலஞ் சென்ற கவிஞர் ஸ்ரீ ரவீந்திரநாத டாகுர் நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பதற்குக் கொஞ்சங்கூடப் பின் வாங்குவதில்லை. யார் போய்க் கேட்டாலும் இல்லை யென்னாமல் கொடுப்பார். இன்ன பொருளுக்குத்தான் நற்சாட்சி கொடுக்கலாம், இன்ன பொருளுக்குக் கொடுக்கக் கூடாது என்ற வரை யறை கூடப் பார்ப்பதில்லை. சோப்பு, பற்பொடி, தைலம் எல்லா வற்றுக்கும் கொடுத்து வந்தார்.

இது அவருடைய காரியதரிசிக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் அவர் கவிஞரை நோக்கி, "தாங்கள் இந்த மாதிரி நற்சாட்சிப் பத்திரம் கொடுத்துக் கொண்டே போனால், கொஞ்ச காலத்தில் தாங்கள் நற்சாட்சிப் பத்திரம் கொடுக்காத பொருளே உலகத்தில் இல்லை என்று சொல்லும்படியாக அல்லவா வந்து சேரும்! இது சரியல்லவே?" என்றார்.

டாகுர் ரொம்பப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் காரியதரிசியைப் பார்த்து, "அல்ல, நீர் நினைப்பது தவறு. எல்லாப் பொருள்களுக்கும் நான் நற்சாட்சிப் பத்திரம் கொடுத்து விடுவேன் என்று நீர் பயப்படுவது சரியல்ல. ஏனென்றால், நான் நற்சாட்சிப் பத்திரம் கொடுக்க முடியாத பொருளும் ஒன்று இருக்கிறது" என்றார்.

காரியதரிசி அதிசயத்துடன், "அது என்ன?" என்று கேட்டார்.

"ரேஸர் பிளேட்!" (க்ஷவரக்கத்தி) என்றார் தாகுர் தமது நீண்ட தாடியைத் தடவிக்கொண்டே.

ஸ்ரீ வ. உ சிதம்பரம் பிள்ளை

ஞாபகார்த்த நிதிக்காக

ஸ்ரீ சக்தி நாடக சபையாரால்

20-1-46 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

திண்டுக்கல் சோலை ஹாலில்

- ஜீவன் -

(எழுதியது: 'இளமதி')

நாடகம் நடைபெறும்.

★

'கல்கி' ஆசிரியர்
ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
தலைமை வகிப்பார்கள்.

★

தமிழ் நாட்டில் முதன் முதலாக தேசீய லட்சியமாய் அமைந்துள்ள புதிய நாடகம் இது ஒன்றே.

டிக்கெட்டுகள்: வழக்கம்போல்

டி. கே. கிருஷ்ணசாமி,
மானேஜிங் புரோப்ரைட்டர்


ஸிரோலின்
'ரோச்'
இருமல் ஜலதோஷத்திற்கு
SIROLIN



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



ALKI ஜனவரி 13, 1946 4 அணா

Regd. No. M. 4392

